Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
கண்டுக்குளி கிளை

விலை ரூபா 7.00

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
FedEx Express®
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும் விரைவாக பொதிகள், கடிதங்களை அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்
திருமுருகன் கொம் நெற்
259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம். (Opposite All Cylon Distributors) Tel - 021 222 7835 Fax - 021 222 7836
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் (பலநோக்கு கூ.ச.முன்பாக) Tel - 021 222 7560 Fax - 021 222 7310

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 06 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 07 (22.10.2004) வெள்ளிக்கிழமை இதழ்: 22

## மூன்று வருட சேவையை முடித்த தொண்டராசிரியர்களுக்கு நியமனம்!

(கொழும்பு)

மூன்று வருடகால சேவையைப் பூர்த்தி செய்த தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் எனக்கோரி அகில இலங்கைத் தொண்டர் ஆசிரியர் சங்கம் சத்தியாக்கிரகம் நடத்திய இடத்துக்குச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்த, சமூகநல நலன்புரி சேவைகள் மற்றும் பெண்கள் விவகார பிரதி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன இந்த உறுதி மொழியை வழங்கினார். மூன்றுவருட கால சேவையைப் பூர்த்தி செய்த அனைத்துத்

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஒஸ்லோவில் நேற்றுமுன்தினம் நேர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன், பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான தூதுவர் பிரட்ஸ்கர் ஆகியோரைக் கொண்ட குழுவினரை விடுதலைப் புலிகளின் அரசியல் விவகார குழுவில் இடம்பெற்றுள்ள அரசியற்துறைப் பொறுப்பாளர், சு.ப.தமிழ்ச்செல்வன் காவற்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், நீதித்துறைப் பொறுப்பாளர் பரா மற்றும் கௌசல்யன், தமிழ்விழி, செல்வி ஆகியோர் சந்தித்து பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# வாக்குறுதிகளை நிறைவேற்றாவிடின் அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்போம்!

## ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

கடந்த பொதுத் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

## கருணா குழுவின் பெயரில் படையினர் துண்டுப்பிரசுரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் சீருடை தரித்த இராணுவத்தினரால் - விடுதலைப்புலிகளை வசைபாடும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

am Foundation.
naham.org

# ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

**கடந்த பொதுத் தேர்தலின்போது நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.**

**இல்லாவிழன் இந்த அரசாங்கத்தை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் கவிழ்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.**

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினை கட்டுப்படுத்தக் கோரியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் கடந்த பொதுத் தேர்தலின்போது - அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றக் கோரியும், நாடு முழுவதிலும் நடத்திவரும் ஆர்ப்பாட்டங்களின் அங்கமாக - மாத்தறையில் நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி இந்த எச்சரிக்கையினை விடுத்தது.

ஹத்மன, அக்குரசன்ன உட்பட பல பிரதேசங்களிலிருந்து வந்து மாத்தறையில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவால் தாம்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த விஜய சேகர, லக்ஸ்மன் ஜாப்பன, சாகல இரத்னாயக்க ஆகியோருடன் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

நகரில் ஏழு இடங்களிலிருந்து புறப்பட்ட பேரணிகள் பின்னர் நகர மத்தியில் இணைந்ததும், ஆர்ப்பாட்டப் பொதுக்கூட்டம் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## கருணா குழுவின் பெயரில் படையினர் துண்டுப்பிரசுரம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரின் உயர்பாதுகாப்பு வலயத்தில் சீருடை தரித்த இராணுவத்தினரால் - விடுதலைப்புலிகளை வசைபாடும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழீழ விடுதலைப் புலிகளையும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையையும் வசைபாடும் மேற்படி துண்டுப் பிரசுரங்களை நேற்றுமுன்தினம் இரவு உயர்பாதுகாப்பு வலயத்திற்குள் இராணுவத்தினர் விநியோகித்தனர். அதேவேளை நகரின் வேறுசில பகுதிகளிலும் இதையொத்த சிறு சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

கருணாவின் பெயரிலேயே வெளியிடப்பட்டுள்ள இந்தத் துண்டுபிரசுர விநியோகத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தோர் மீது அதிரடிப்படையினர் தாக்குதல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேச செயலகத்துக்கு முன்பாக கருணாவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று தாக்கப்பட்டனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவுக்கு நேற்றுமாலை விடுதலைப் புலிகளினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

கருணாவின் அரசியல் கட்சியை பதிவு செய்யக் கூடாது எனக் கோரி, ஆரையம்பதி பிரதேச செயலகம் முன்பாக அப்பிரதேச மாணவர்கள் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த மாணவர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட தயாரான போது, அருகிலுள்ள படை முகாமிலிருந்து அங்கு விரைந்த விசேட அதிரடிப்படை (12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா - இலங்கையிடையே பாதுகாப்பு உடன்படிக்கை இறுதி வடிவம் தயார்!

### சிறில்ஹேரத் தகவல்

(கொழும்பு)

இந்திய அரசாங்கத்துடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடுவது தொடர்பான இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பு வந்துள்ள இந்திய பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் ரஞ்சித் கிசர் தலைமையிலான ஐவர் கொண்ட உயர் மட்டப் பாதுகாப்பு அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நாளை நமது ஈழநாட்டில் க.பொ.த. (சா/த) மாணவர்களுக்கான வணிகக் கல்வியும் கணக்கீடும், கணிதம் ஆகிய பாடங்களின் மாதிரி வினாத்தாள்கள் வெளிவரவுள்ளன. உங்கள் பிரதியை உறுதிசெய்து கொள்ளுங்கள்.

## பொருத்தமான சமஷ்டிமுறை மூலமே இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும்!

### அமெரிக்க பல்கலைக்கழக பேராசிரியர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொருத்தமான சமஷ்டிமுறை ஒன்றின் மூலமே - இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த முடியுமென சர்வதேச பிரச்சினை தொடர்பான மத்தியஸ்தராகக் கடமையாற்றும் அமெரிக்க ஹவாட் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜொகான் கல்டு தெரித்தார்.

சக வாழ்விற்கான மன்றம் நேற்று கொழும்பில் ஏற்பாடு செய்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நிலவிவரும் இனப்பிரச்சினைக்குத் தர்வுகாணவேண்டுமாயின் இடைக்கால யாப்பு ஒன்றினைத் தயாரிக்க வேண்டும். தற்போதுள்ள நடைமுறை யாப்பின்படி ஒரு விடயத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுகிறது. இச்சிக்கலைத் தவிர்ப்பதற்காகவே இடைக்கால யாப்பு ஒன்று தயாரிக்கப்பட வேண்டும்.

இடைக்கால யாப்பினைத் தயாரிக்கும் போது இவ்விடயத்தில் அதிகளவு கவனம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவுக்கு எதிராக மட்டு. நகரில் ஆர்ப்பாட்டம்!

(மட்டக்களப்பு)

கருணாவின் புதிய கட்சிப்பதிவை எதிர்த்து மட்டக்களப்பு கல்வியியற் கல்லூரி, கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் உட்பட ஏராளமான கிழக்கு மாகாண மாணவர்கள் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்வியியற் கல்லூரி, கிழக்குப் பல்க

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

மாகாண சுகாதார சேவைகள்

பிரதிப் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி

## பால் தவிர்ந்த சமைத்த/உலர் உணவு வழங்கல் – 2005

2005 ஆம் ஆண்டு மா.சு.சே.பி.பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பால் தவிர்ந்த சமைத்த உலர் உணவு வழங்குவதற்கான கேள்விகள் 2004.11.10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் தமது பெறுமதி சான்றிதழும் (Worth report) எம்மால் குறிப்பிடப்படும் தொகைக்கு ஏற்ப உத்தர வாத முறியும் (Bid Bond) சமர்ப்பித்து கேள்விப்பத்திரப் பணமாக ரூபா 100/= அட்டவணையில் காட்டப்பட்ட மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமும் செலுத்தி 2004.11.09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 16.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

விபரங்கள் பின்வருமாறு:

அ. உலர் உணவு வழங்குவதற்கான வைத்தியசாலைகள்

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| மா.வை.கிளிநொச்சி | 2000 ரூபா | 50000 ரூபா | 20000 ரூபா |

ஆ. சமைத்த உணவு வழங்குவதற்கான வைத்தியசாலை

| நிறுவனம் | கேள்விப்பிணை | உத்தரவாதமுறி | பெறுமதிச் சான்றிதழ் |
|---|---|---|---|
| சு.கூறு.அக்கராயன் | 1500 ரூபா | 40,000 ரூபா | 15,000 ரூபா |
| சு.கூறு.பூநகரி | 1500 ரூபா | 40,000 ரூபா | 15,000 ரூபா |
| சு.கூறு.பளை | 1500 ரூபா | 30,000 ரூபா | 15,000 ரூபா |
| ம.ம.ம.மனை தர்மபுரம் | 1000 ரூபா | 25,000 ரூபா | 15,000 ரூபா |
| ம.ம.ம.மனை வட்டக்கச்சி | 1000 ரூபா | 20,000 ரூபா | 15,000 ரூபா |
| ம.ம.ம.மனை வேரவில் | 1000 ரூபா | 20,000 ரூபா | 15,000 ரூபா |
| ம.ம.ம.மனை உருத்திரபுரம் | 1000 ரூபா | 20,000 ரூபா | 15,000 ரூபா |

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும் இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ள முடியும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விக்காரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்.
கிளிநொச்சி.

(சி/2873)

# அரசாங்க அறிவித்தல்

மாகாண சுகாதார சேவைகள்

பிரதிப் பணிப்பாளர் பணிமனை – கிளிநொச்சி

## அழுக்குத்துணி கழுவுதல் – 2005

2005 ஆம் ஆண்டு மா.சு.சே.பி.பணிப்பாளர் கிளிநொச்சி பிரிவிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அழுக்குத்துணி கழுவுவதற்கான கேள்விகள் 2004.11.10 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பெற்று, முற்பகல் 10.30 மணிக்கு திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புவோர் கேள்விப் பணமாக ரூபா 50/= ஐயும் கேள்விப் பத்திரப் பணமாக ரூபா 100/= ஐயும் செலுத்தி 2004.11.04 ஆம் திகதி புதன்கிழமை 16.00 மணிவரை இப்பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

### நிறுவனம்

01. மாவட்ட வைத்தியசாலை
02. சு.கூறு அக்கராயன்
03. சு.கூறு பூநகரி
04. சு.கூறு பளை
05. ம.ம.ம.மனை தர்மபுரம்
06. ம.ம.ம.மனை வட்டக்கச்சி
07. ம.ம.ம.மனை வேரவில்
08. ம.ம.ம.மனை உருத்திரபுரம்

கேள்விகள் இணைப்பிரதிகளில் மூலப்பிரதி தனியாகவும், இணைப்பிரதி தனியாகவும் மெழுகு முத்திரை இடப்பட்ட உறைகளில் இட்டு, கேள்வி விபரம் எழுதப்பட்டு இப்பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் இடப்படல் வேண்டும். கேள்விகள் தபாலில் இடப்படின் தாமதத்திற்கு அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது. நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டுத்தொகைக்கு மேலாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. மேலதிக விபரங்களை இப்பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்துகொள்ளமுடியும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விகாரர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதி கலந்துகொள்ளமுடியும்.

வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி.
மாகாண சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர்.
கிளிநொச்சி.

(சி/2872)

# யாழ்.பல்கலையில் புதிய கற்கைநெறி

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள குடித்தொகை அபிவிருத்தி கல்விக்கான கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வு நாளை காலை 9 மணிக்கு யாழ் பல்கலைக் கழக புவியியற்துறை மண்டபத்தில் நிகழவுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கான இணைப்பாளரும் புவியியற்துறைத் தலைவருமான பேராசிரியர் கா. குகபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ்ஷம், சிறப்பு விருந்தினர்களாக பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பதிற் பீடாதிபதி சபா. ஜெயராசா,கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுளஎனர்.

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் இருந்து கடந்த வாரம் மலசலகூட மீள் துப்புரவுப் பணிக்காக விடுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட முதலாம், இரண்டாம் வருட முகிழ்நிலை ஆண் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலொன்று இன்று மாலை நான்கு மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

எனவே இன்றைய இந்தக் கலந்துரையாடலில் யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாம், இரண்டாம் வருட முகிழ்நிலை ஆண் ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு மாணவர் பேரவைத் தலைவர் பி.பகீரதன் கேட்டுள்ளார்.

## ஏடு தொடக்குதலும் நூல்களின் கண்காட்சியும்

விஜயதசமி தினத்தை முன்னிட்டு, சங்கானை மாவடி சனசமூக நிலையத்தால் நடத்தப்படும் வாணி விழா, நாளை சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு தலைவர் க.ஸ்கந்தராசா தலைமையில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தவிழாவில், காலை 8.00 மணிமுதல் 1 மணிவரை நூல்களின் கண்காட்சியும், 1 மணிக்கு நவராத்திரி பூஜையும் ஏடு தொடக்குதலும், 2 மணிக்கு புதிதாக வடிவமைக்கப்பட்ட பொது நூல் நிலையத் திறப்பு விழாவும், பிற்பகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மாணவர்களினதும், சிறுவர்களினதும் கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளதாக நிலையச் செயலாளர் தெரிவித்துள்ளார். (48)



# வாணி விழா



கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தினரால் நடத்தப்படும் வாணிவிழா இன்று மாலை 6 மணிக்கு நிலையத் தலைவர் அ.கஜேந்திரகுமார் தலைமையில் நடைபெவுள்ளது. (82)

□ □ □ □ □ □

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்றுவரும் நவராத்திரி விழாவில் நாளை விஜயதசமி பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று, மானம்பூத்திரு விழாவும் தொடர்ந்து வசந்தமண்டபப் பூஜையும், விஷேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.(82)

□ □ □ □ □ □

நல்லூர் பிரதேசசபையினரின் வாணி விழா நிகழ்வுகள் இன்று காலை பிரதேசசபை மண்டபத்தில இடம்பெறவுள்ளன.

நல்லூர் பிரதேசசபையின் நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இந்த வாணிவிழா நிகழ்வுகள் இடம்பெறும் என நல்லூர் பிரதேச சபையின் செயலாளர் வைரமுத்து தெரிவித்தார்.

□ □ □ □ □ □

இணுவில் கிழக்கு கலாஜோதி சனசமூக நிலையம் நடாத்தும் வாணி விழாவும் தொலைக்காட்சி எதிர்ப்புதின இறுதி நாள் நிகழ்வும் இன்று இரவு 7.30 மணிக்கு சன சமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - யாழ் மேற்கு போரூட் திட்டப்பணிப்பாளர் அ. டெனி பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக சுன்னாகம் அரசியற்துறைப் பொறுப்பாளர் பவநிதன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் ப.பகீரதன், போரூட் கணக்காளர் பி. சுமதி, போரூட் வெளிக்கள உத்தியோகத்தர் மூர்த்தி, வளநாடன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

□ □ □ □ □ □

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தால் நடாத்தப்படும் நவராத்திரி விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு, பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தநிகழ்வில் பாடசாலை மாணவ, மாணவிகளின் நடன, இசைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (48)

(கோண்டாவில்)

கோண்டாவில் வடக்கு அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலயத்தில் நடைபெற்று வரும் நவராத்திரிவிழா நாளை விஜயதசமியன்று பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று மானம்பூத் திருவிழாவும், தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜையும், விசேட அபிஷேகமும் நடைபெறவுள்ளன. (82)

□ □ □ □ □ □

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் மேற்கு இளைஞர் சனசமூக நிலையத்தினரால் நடாத்தப்படும் வாணிவிழா நாளை காலை 10 மணிக்கு நிலையத் தலைவர் இ. சொர்ணலிங்கம் தலைமையில் நிலைய பாலர் பாடசாலை மணடபத்தில் நடைபெறவுள்ளது. விஜயதசமி நாளான அன்றையதினம் சிறார்களுக்கு ஏடு தொடக்குதல் இடம்பெறும் எனவும் கூறப்பட்டது.


நிரஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



போஸ் (ரீல்ஸ்)

ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 ... நே

ராஜா யாழ்ப்பாணம்

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G ரெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

மலிவு மலிவு கொள்ளை மலிவு

வாடிக்கையாளரின் வேண்டுகோளுக்கிணங்க

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

இன்று முதல் (16-10-04) தொடக்கம் 11-11-2004 வரை

சகல விதமான உடுபுடவைகள் மற்றும் ரெடிமேட் உடுப்புக்களையும் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

லைடன் புடவை நிலையம்
410, ஆஸ்பத்திரி வீதி ,
யாழ்ப்பாணம்.
222-2381

(C/3264)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலைகளை கண்டித்து மாநாடு நடத்தத் திட்டம்!

## புலிகளுக்கு எதிராக கட்சிகள் மும்முரம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் கொலைகளை மேற்கொண்டு வருவதாகக் கூறி, அதைக்கண்டித்து சில அரசியல்கட்சிகள் கொழும்பில் மாநாடொன்றை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டை ஜே.வி.பி. மக்கள் ஐக்கிய முன்னணி, ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி), புளொட ஆகிய கட்சிகளே இணைந்து நடத்தவுள்ளன.

எதிர்வரும் 25 ஆம் திகதி இந்த மாநாடு நடத்தப்படவுள்ளதாகவும் இதற்காக, கடந்த செவ்வாய்க்கிழமை இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் கூடி ஆராய்ந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தக் கூட்டத்தில் - போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்பட்ட பின்னரே கொலைகள் அதிகமாக இடம்பெறுவதாக கட்சிகளின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கிணங்க, தமது கட்சியின் சார்பில் இருவர் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியதாகப் புளொட் அமைப்புத் தெரிவித்தது.

கொலைகள் கண்டிக்கப்பட வேண்டியவை. எனினும், புலிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகளுக்கு எதிராக மாத்திரம், கொழும்பில் எதிர்வரும் 25 ஆம் திகதி மாநாடு நடத்தப்பட்டால், அதில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லையென கடந்த செவ்வாய்க்கிழமை முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமது பிரதிநிதிகள் தெரிவித்ததாக புளொட் அமைப்பினர் தெரிவித்தனர்.

இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமது பிரதிநிதிகளும், ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி) பிரதிநிதிகளும் - கொலைகளை மாத்திரம் மையப்படுத்தாமல், அதிகாரப் பகிர்வு என்ற விடயம் தொடர்பாகவும் ஜே.வி.பி பேசவேண்டும் என கேட்டுக்கொண்டபோதும் அதற்கு ஜே.வி.பி சார்பிலிருந்து உரிய பதிலெதுவும் வழங்கப்படவில்லையெனவும் புளொட் தெரிவித்தது.

இதனிடையே போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்னர் கொலைகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை, ஐக்கிய தேசியக்கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஜயலத் ஜயவர்த்தன மறுத்துள்ளார்.(01)

# அப்துல் காதருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி நிதியில் மோசடி செய்தார் என சந்தேகிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சரான ஏ.ஆர்.அப்துல் காதரின் விளக்கமறியல் அடுத்தமாதம் 3 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இவரை பிணையில் விடுவிக்குமாறு நேற்றுக் கொழும்பு நீதிமன்றில் கேட்டுக்கொண்டபோதும், அதனை ஏற்க மறுத்த நீதிவான் இந்த விளக்கமறியல் உத்தரவை வழங்கினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சமுர்த்தி அமைச்சின் முன்னாள் செயலர் குமார் நவரட்ணவை விசாரணை செய்யவேண்டுமெனவும் பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்தார்.

ஆனால் குறித்த நபர் தற்போது இலங்கையில் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி.

# கிங்ஸ்லி கொலை; அரசு கண்டனம்!

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான கிங்ஸ்லி இராசநாயகம் சுட்டுக் கொல்லப்பட்டதை இலங்கை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அரசாங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அரசியல் விரோதிகளை ஒழித்துக் கட்டும் நடவடிக்கை தொடர்வது ஜனநாயக சமூகமொன்றின் விழுமியங்களை மழுங்கடிக்கச் செய்யும் செயலாகும்.

சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டி இவ்வாறான படுகொலைகளுக்குப் பொறுப்பானவர்களைக் கண்டுபிடித்து நீதியின் முன் நிறுத்த அரசாங்கம் தொடர்ந்தும் செயலாற்றும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(04)

## ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக

# மாணவர்களின் பிரச்சினைகளை தீர்க்க அரசாங்கம் நடவடிக்கை

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக விடுதியில் தங்கியுள்ள மாணவர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக உப வேந்தர் சந்திமா விஜயபண்டார இது குறித்துத் தெரிவிக்கையில் -

நிதியமைச்சின் அதிகாரிகள் - 400 அறைகளைக் கொண்ட மாணவர் விடுதியை உடனடியாக நிர்மாணிக்க இணங்கியுள்ளனர்.

இந்த விடுதி அமைக்கப்பட்டதும் மாணவர்களின் விடுதிப் பிரச்சினை ஓரளவு தீர்க்கப்பட்டுவிடுமெனவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் 8 ஆயிரம் மாணவர்கள் கல்விகற்று வருவதாகவும், அவர்களில் 17 சத வீதத்தினருக்கு தங்குமிட வசதி வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அவுஸ்ரேலியத் தூதுவரை சம்பந்தன் சந்தித்து பேச்சு!

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன், அவுஸ்ரேலிய உயாஸ்தானிகரைச் சந்தித்து தற்போதைய அரசியல்நிலை குறித்துக் கலந்துரையாடினார்.

நேற்றுமுன்தினம் காலை கொழும்பிலுள்ள இலங்கைக்கான அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் - அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்.

விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள வடக்கு - கிழக்குக்கான இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்த யோசனைகளின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்கள் அமையவேண்டும் என்றும், அதற்குத் தாம் பூரண ஆதரவு வழங்குவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தும் -

அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு எந்தவித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்த நிலையில் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிப்பதை இழுத்தடித்துவருவது சமாதான முயற்சியை கேள்விக்குறியாக்கியுள்ளது.

எனவே, பேச்சுக்களை விரைவில் ஆரம்பிப்பதற்கு அரசாங்கத்துக்கும், ஜனாதிபதிக்கும் அவுஸ்ரேலியா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும், இரா.சம்பந்தன் அவுஸ்ரேலிய உயர்ஸ்தானிகரிடம் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பங்குவிலைச் சுட்டெண் திடீரென அதிகரித்தது!

(கொழும்பு)

கொழும்பு பங்குச்சந்தையில் சகல பங்குவிலைச் சுட்டெண்களும் நேற்றுமுன்தினம் 1530.9 புள்ளிகளாக அதிகரித்தது. இந்த விலைச் சுட்டெண்கள் முன்னர் ஒருபோதும் இவ்வாறு அதிகரிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஆரம்பத்தில் 1506 புள்ளிகளாக இருந்த பங்கு விலைச் சுட்டெண், பங்குச்சந்தை முடிவின்போது 24 புள்ளிகளால் அதிகரித்தது. 2000 ஆம் ஆண்டில் இது வரை 468.8 புள்ளிகள் அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது.

ஆசிய பங்குச்சந்தைகளில் கொழும்பு முதன்மை இடத்தை வகிப்பதுடன் உலகின் சிறந்த பங்குச்சந்தைகளில் ஒன்றாக உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# சமாதானப் பேச்சுக்களிலிருந்து நோர்வே தரப்பு விலகவேண்டும்

## கருணா குழு கோரிக்கை

விடுதலைப் புலிகள் தொடர்ந்தும் தமது அரசியல் எதிரிகளைக் கொல்வதை, சமாதானப் பேச்சுவார்த்தையில் அனுசரணையாளராக உள்ள நோர்வேயால் தடுத்து நிறுத்த முடியாத நிலையில், நோர்வே சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து விலகிக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு, கருணா குழு நோர்வேப் பிரதமர் பொண்டவிக்கிற்கு அனுப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக அந்த இணையத் தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் -

சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நோர்வே தொடர்ந்தும் அனுசரணையாளர் பங்கை வகிக்குமாக இருந்தால், அது விடுதலைப் புலிகளின் தொடர் கொலைகளுக்கு ஊக்கமளிப்பதாகவே இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தத் தகவலை ஒஸ்லோ பெற்றிருக்குமா என்பதனை உடனடியாக உறுதிப்படுத்த முடியாமலிருப்பதாக கொழும்பி லுள்ள நோர்வேத் தூதரகத்தின் பெண் பேச்சாளரான ஜேஸ்ரி ட்ரொம்ஸ் டால் தெரிவித்தார்.

# கண்டி வைத்தியசாலையில் காலாவதியான மருந்துப் பொருட்கள்


கண்டி அரசினர் வைத்தியசாலையில் காலாவதியான மருந்துப் பொருட்கள் பயன்படுத்தப்பட்டமை கண்டறியப்பட்டுள்ளது.

என்பு உடைவுகள் மற்றும் என்புப் பொருத்துக்களை ஒட்டவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் விலை உயர்ந்த ஒட்டும் வலுவுள்ள மருந்துப்பொருள் ஒன்றே இவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது.

சுமார் ஒரு வருடத்துக்கு முன்பாகவே காலாவதியாகிய இந்த மருந்தின் காலாவதியாகும் திகதி மாற்றம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இந்த மருந்துப் பொதிகளின் பெறுமதி 10 இலட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் 6 000 ரூபாய் பெறுமதியான மருந்து - பொதிகளில் அடைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் காலாவதியான இந்த மருந்தை அடுத்த ஆண்டு ஜூலை வரை பயன்படுத்தும் வகையில் காலாவதியாகும் திகதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

இந்த மருந்தின் 50 பொதிகள் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில் மேலும் பலநூற்றுக் கணக்கான பொதிகள் வைத்திய சாலைக் களஞ்சியத்தில் சேமிக்கப்பட்டிருந்தன. தனியார் நிறுவனம் ஒன்றிடமிருந்து சுகாதார அமைச்சு இந்த மருந்து வகையைக் கொள்வனவு செய்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.



பிரஷெல்சில் ஐரோப்பிய யூனியனின் பிரதிநிதிகளை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள்.

# முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மூவர் வேறு அமைப்பாக செயற்படவுள்ளனர்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் இணைந்து வேறொரு அமைப்பை ஏற்படுத்தப் போவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பான விசேட கலந்துரையாடலொன்றையும் நடத்துவதற்குத் தீர்மானித்திருக்கின்றனர்.

ரிசாத் பதியுதீன், நஜீப் எம் மஜீத், அமீர் அலி ஆகிய மூவருமே இந்த முடிவுக்கு வந்ததாகக் கூறப்படுகிறது.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் ஒரு மாற்று அமைப்பையும் ஏற்படுத்தி, தமது அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்பார்ப்பாகும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியோடு இணைந்து பிரதி அமைச்சர் பதவிகளைப் பெறுவதே இதன் நோக்கமாக இருக்கலாமெனவும் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பைசலாபாத் டெஸ்ட்

# இலங்கை அணியின் பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி திணறல்



(கராச்சி)

பைசலா பாத் நகரில் நடைபெற்றுவரும் இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில்- 243 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் வீழ்த்திய பாகிஸ்தான் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 7 விக்கெட் இழப்புக்கு 233 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் முதல்நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

97 ஓட்டங்களுடன் சமரவீரவும், 28 ஓட்டங்களுடன் ரங்கன ஹேரத்தும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று இரண்டாவது நாள் ஆட்டம் தொடங்கப்பட்ட சிறிது நேரத்தில் சமரவீர 100 ஓட்டங்களைப் பெற்றார்.

எனினும் அவர் அக்தர் வீசிய பந்துக்கு சமியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

232 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் சமரவீர தனது சதத்தைப் பூர்த்தி செய்திருந்தார். இதையடுத்து டில்கார பெர்னாண்டோ மற்றும் மாலிங்க ஆகியோரும் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

பெர்னாண்டோவின் விக்கெட்டை அக்தரும், மாலிங்கவின் விக்கெட்டை சமியும் கைப்பற்றினர்.

நேற்றைய ஆட்டம் தொடங்கி 10 ஓட்டங்களைப் பெறுவதற்குள் இலங்கை அணி 3 விக்கெட்டுக்களையும் இழந்து முதல் இனிங்ஸில் 243 ஓட்டங்களைப் பெற் றது.

ஆட்டநேர முடிவில் ரங்கன ஹேரத் 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

முதல் இனிங்ஸில் அக்தர் 19 ஓவர்கள் பந்துவீசி 60 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். மொகமட் சமி 21.4 ஓவர்கள் பந்துவீசி 71 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், டினேஸ் கனேரியா 18 ஓவர்களில் 53 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

அத்துடன் 9 உதிரி ஓட்டங்களைப் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் கொடுத்தனர்.

இதையடுத்து பாகிஸ்தான் அணி நேற்றுத் தனது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக யாசிர் ஹமீட்டும், இம்ரான் பர்கத்தும் களமிறங்கினர்.

இவர்கள் பொறுப்புணர்வுடன் ஆடிக்கொண்டிருந்தபோது முதலாவது விக்கெட் 28 ஆவது ஓட்டத்தைப் பெற்றநிலையில் வீழ்த்தப்பட்டது. இம்ரான் பர்கத் 11 ஓட்டங்களில் மாலிங்கவின் பந்துவீச்சில் முபாரக்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து சென்றார்.

அடுத்துக் களமிங்கிய அஸீம் கமால், யாசிர் ஹமீட்டுடன் நிலைத்து நின்று ஆடினார். அஸீம் கமால் ஓட்டங்களைப் பெறுவதைவிட மைதானத்தில் நிலைத்து நிற்கவே பெரிதும் முயற்சித்தார்.

எனினும் இவர் 17 ஓட்டங்களுடன் - அணி 94 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், தில்காராவின் பந்து வீச்சில் ஜெயவர்த்தனவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்தாக இன்சமாம் களம் இறங்கினார். எனினும், சற்று நேரத்தில் யாசிர் ஹமீத் 58 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் டில்காரவின் பந்துவீச்சில் முபாரக்கிடம் பிடி கொடுத்து ஆட்டமிழக்க நேரிட்டது.

யாசிர் ஹமிட் 102 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 58 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நான்காவது விக்கெட்டாக களமிறங்கிய யூசுப் யுகானா இன்ஸமாமுடன் இணைந்து ஓட்டங்களைக் குவிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் இருவருமே பெரிதாகச் சாதிக்கவில்லை.

பாகிஸ்தான் அணி 134 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் யூசுப் யுகானா 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சென்றார்.

இவரது விக்கெட்டை ஹேரத் வீழ்த்தினார். இதன் பின்னர் சொகைப் மலிக் களமிறங்கி பாகிஸ்தான் அணியை சரிவிலிருந்து மீட்க முற்பட்டார்.

அதற்கிடையில் எதிர்முனையில் இருந்த இன்ஸமாம் உல் ஹக் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 67 பந்துகளை 4 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றார்.

இதையடுத்து அப்துல் ரசாக் களமிறங்கினார். இருவரும் இணைந்து ஓட்டங்களைக் குவிக்க முயன்றபோது, மலிக் 48 ஓட்டங்களில் 'ரன் அவுட்' ஆனார். இவர் 81 பந்துகளில் 7 பவுண்டரிகளுடன் இந்த ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அப்துல் ரசாக்குடன், மொயின் கான் களமிறங்கிய போதிலும் - அவரால் நீண்ட நேரம் தாக்குப் பிடிக்க முடியவில்லை. 17 பந்துகளை எதிர்கொண்ட அவர் 5 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஜயசூரியாவின் பந்து வீச்சில் போல்டாகி வெளியேற நேரிட்டது.

இதற்கிடையில் அப்துல் ரசாக்கும், 39 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், வாஸ் வீசிய பந்தை ஜெயவர்த்தனவிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

நேற்று ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது முகமட் சமி 2 ஓட்டங்களுடனும், அக்தர் 6 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.


பாகிஸ்தான் அணி முதல் இனிங்ஸில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பந்துவீச்சில் டில்கார பெர்னான்டோ, ரங்கன ஹேரத் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

வாஸ், மாலிங்க, ஜயசூரியா ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

நேற்று இலங்கை அணியின் பந்துவீச்சாளர்கள் 21 ஓட்டங்களை உதிரிகளாகக் கொடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கேரளாவில் ஓய்வைக் கழிக்கும் அவுஸ்ரேலிய வீரர் ஹைடன்



(கொச்சி)

அவுஸ்ரேலிய தொடக்க ஆட்டக்காரர் மத்யூ ஹைடன் இயற்கை எழில் நிறைந்த கேரளாவுக்கு ஓய்வு எடுக்க சென்றுள்ளார்.

இந்திய-அவுஸ்ரேலிய அணிகள் மோதும் 3-வது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 26 ஆம் திகதி நாக்பூரில் தொடங்க உள்ளது. சென்னை டெஸ்ட் போட்டிக்குப்பின்னர் சில நாட்கள் முழுமையாக ஓய்வு கிடைத்துள்ளதால் அவுஸ்ரேலிய வீரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பகுதிக்கு சென்று ஓய்வு எடுத்து வருகிறார்கள்.

தொடக்க ஆட்டக்காரர் மத்யூஹைடன் இயற்கை எழில் நிறைந்த கேரளாவுக்கு சென்று ஆலப்புலா பகுதியில் ஓய்வு எடுத்து வருகிறார். இன்னும் 2 நாட்கள் கேரளாவில் தங்கிய பின்னர் அவர் நாக்பூர் புறப்பட்டு செல்ல இருக்கிறார். அவுஸ்ரேலிய கப்டன் கில்கிறிஸ்ட் ஓய்வுக்காக சிங்கப்பூர் சென்றுள்ளார். எஞ்சிய வீரர்கள் கோவா சென்றிருக்கிறார்கள்.

விளையாட்டு

# டெண்டுல்கரின் ஓய்வால் அவரின் ஆட்டம் பாதிக்காது

## இந்திய கப்டன் கங்கூலி கூறுகிறார்



(கொல்கத்தா)

ஓய்வால் டெண்டுல்கர் ஆட்டம் பாதிக்காது என்று இந்திய கப்டன் கங்கூலி கூறியுள்ளார்.

இந்தியா - அவுஸ்ரேலியா மோதும் 3 ஆவது டெஸ்ட் கிரிக்கெட் தொடர் வருகிற 26 ஆம் திகதி நாக்பூரில் நடக்கவுள்ளது.

இந்திய வீரர்கள் அனைவரும் சென்னை டெஸ்ட் முடிந்த கையோடு தங்களின் சொந்த ஊருக்கு சென்றுவிட்டனர். கப்டன் கங்கூலி கொல்கத்தாவில் ஓய்வு எடுத்து வருகிறார்.

இந்நிலையில் கொல்கத்தாவில் கங்கூலி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறுகையில். 3 ஆவது டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் கண்டிப்பாக இடம் பிடிப்பார் என்பது என்னுடைய கணிப்பு முழங்கை வலியால் அவதிப்பட்டுவரும் டெண்டுல்கரிடம் நான் தொலைபேசியில் எதுவும் பேசவில்லை. எனவே அவரின் தற்போதைய உடல்நிலை குறித்து எதுவும் எனக்கு தெரியாது. இருந்தாலும் எனக்குள் இருக்கும்நம்பிக்கை கூடிக்கொண்டுதான் இருக்கிறது.

ஆட்டத்தின் உச்சத்தில் டெண்டுல்கர் உள்ளார். அவர் உடல்தகுதிதான் இப்போதைக்கு முக்கியம். எவ்வளவு காலம் ஓய்வில் இருந்தாலும் முதல்போட்டியிலேயே அவர் தனது ஆட்டத் திறனை வெளிப்படுத்துவார்

சென்னை டெஸ்ட் போட்டியில் இந்திய அணிக்கு 229 ஓட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 4 ஆவது நாள் முடிவில் விக்கெட் இழப்பின்றி இந்தியா 19 ஓட்டம் சேர்த்தது. கடைசி நாளில் 210 ஓட்டங்கள் மட்டுமே தேவை என்ற நிலையில் இந்தியா காத்திருந்தது. ஆனால் மழை ஆட்டத்தை கெடுத்து விட்டது. இதுகுறித்து அவுஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர் மெக்ரா கூறுகையில். மழையின் பாதிப்பு இல்லாமல் இருந்திருந்தால் சென்னைடெஸ்ட் போட்டியில் எங்களுக்கு வெற்றி கிடைத்திருக்கும் என்றார்.

மெக்ராத்தின் இந்தக் கருத்தை கங்கூலி மறுத்தார். சென்னை டெஸ்ட் போட்டியில் இரு அணிக்கும் வாய்ப்பு இருந்தது என்பது தான் உண்மை.

இத்தனைக்கும் கிரிக்கெட்டில் எதையும் கணிக்க முழயாது என்று கங்கூலி கூறினார். டெண்டுல்கர் அணிக்கு திரும்பும் பட்சத்தில் யுவராஜ் அல்லது கை.·.வ் ஆகியோர்களில் ஒருவர் அணியில் இருந்து நீக்கப்படுவர். இதில் யார் அணியில் இருப்பர் என்பது குறித்து இதுவரை நான் முடிவெடுக்கவில்லை. நாக்பூர்சென்ற பின்னர் இது குறித்து முடிவு எடுப்பபேன் என்றார்.

# பங்களாதேஷ் அணிக்கு எதிராக நியூஸிலாந்து 402 ஓட்டங்கள் குவிப்பு



டாக்காவில் இடம்பெற்றுவரும் பங்களாதேஷ் - நியூஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாளான நேற்று, நியூஸிலாந்து அணி தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 402 ஓட்டங்களைக் குவித்தது.

நேற்றுமுன்னதிம் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில் ஓரம் 18 ஓட்டங்களுடனும் மக்கலம் 48 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்றையதினம் இந்த ஜோடி ஆட்டத்தை மிகவும் நிதானத்துடன் தொடங்கியது. இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் அணி 223 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ஜேக்கப் ஓரம் 121 பந்துகளில் 1பவுண்டரி உட்பட 23 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் மொகமட் ரபீக்கின் பந்துவீச்சில் மஞ்சுரல் இஸ்லம் ரனாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் மக்கலத்துடன் விக்ரோறி இணைந்தார். இவர்கள் இருவரும் சிறப்பாக விளையாடிக்கொண்டிருக்கையில் விக்ரோறி 75 பந்துகளில் இரண்டு பவுண்டரி உட்பட 23 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரனாவின் பந்துவீச்சில் ரவிஸ் இக்பாலிடம் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் பிராங்கிலின மக்கலத்துடன் இணைந்தார். இவர்களது இணைப்பாட்டத்தைப பிரிப்பதற்கு பங்களாதேஷ் பந்துவீச்சாளர்கள் கடுமையாகப் போராடினர். இதில் மக்கலம் நிதானமாக விளையாடிய அதேவேளை ஓட்டஙகளையும் குவித்தவண்ணம் இருந்தார். இந்த நிலையில் பிராங்கிலின் 23 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரபாஸ் பாசியாவின் பந்துவீச்சில் ராஜின் சாலேயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்த நிலையில் மக்கலத்துடன் வைஸ்மன் இணைந்தார். இவர் 51 பந்துகளில் 5 பவுண்டரிகள் அடங்கலாக 28 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரபீக்கின் பந்துவீச்சில் போல்டானார்.

இதன் பின்னர் பட்லர் மக்மிலனுடன் இணைந்தார். தொடர்ந்து விக்கெட்டுக்கள் விழுந்தபோதும் மறுமுனையில் தூணாகநின்று நியூஸிலாந்து அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துக்கொண்டிருந்த மக்கலம் 243 பந்துகளில் 2 சிக்சர் 10 பவுண்டரிகள் அடங்கலாக 143 ஓட்டங்களைப் பெற்றிருந்த மக்கலம் ரபீக்கின் பந்துவீச்சில் அலோக் கபாலியிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்ததுடன் நியூஸிலாந்து அணியின் முதல் இனிங்ஸ் முடிவுக்கு வந்தது. இதில் பட்லர் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் மொகமட் ரபீக் 6, மஞ்சுரல் இஸ்லம் ரானா 3, ராமாஸ் பாசியா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தனது இரண்டாவது இனிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 41 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜாவிட் ஓமர் 14, ஹனான் சார்கர் ஒரு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர்.

இந்த இரு விக்கெட்டையும் டானியல் விக்ரோறி கைப்பற்றினார்.

பங்களாதேஷ் தனது முதல் இனிங்ஸில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 177 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# சமூகத்துக்கு தம்மை அர்ப்பணித்த முதியோரை கௌரவிக்க வேண்டும்

## சங்கானை பிரதேச செயலர்

இந்த முதியோர் விழா எமக்காக, எமது சமுகத்துக்காக தமது வாழ் நாளைக் கழித்து, அதற்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் உள்ளங்கை மகிழ்ச்சியாக்குவதற்கும், இன்றைய சிறுவர்கள் என்றோ ஒரு நாள் முதுமை அடையப் போகிறவர்கள்தான் என்பதை ஞாபகப்படுத்துவதற்காகவும் தான் கொண்டாடுகிறோம்.

முதியோர் நல்ல அந்தஸ்துடனும், கௌரவத்துடனும் வாழ வேண்டும். ஆனால், இவற்றை இந்தக் காலத்தில் நாம் அவர்களுக்கு அளிப்பதில்லை. இவ்வாறான பண்பாடு அற்றுப் போய் வருகிறது. இன்றைய இளம் சமுதாயம் இதை உணரவேண்டும் என சங்கானை பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் அண்மையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் முதியோர் தின விழாவில் பேசும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- தாய்- தந்தை, வயது முதிந்தோர் சொற்கேட்டு நடந்தனர் அந்தக் காலத்து இளம் சமுகத்தினர், பிள்ளைகள். ஆனால், இன்று காலம் தலைகீழாகிவிட்டது. பிள்ளைகளின் சொற் கேட்டு நடக்கவேண்டிய நிர்ப்பந்தத்துக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்தச் செயற்பாடானது எமது கலை, கலாசாரப் பண்பாட்டுக்கு ஓர் எச்சரிக்கையாக விளங்குகிறது. முதியோரிடமிருந்து நாம் அவர்களது அனுபவம், கலைவிழுமியங்களை காத்தல் போன்றவற்றை கற்றுக கொள்ள வேண்டும்.

உடல் பலமும், உளப்பலமும் பெற்று - நண்டகாலம் வாழ்ந்து காட்டியவர்கள், காட்டுகின்றவர்கள் முதியோர். முதியோரைக் கனம் பண்ண வேண்டும்.

அவர்களைப் பாராமரித்து, காப்பாற்றி அவர்களின் அனுபவங்களைக் கேட்டறிந்து, நல்லவற்றை நாம் செய்து கொள்ள வேண்டும் என்பதை இன்றைய சமுதாயம் உணர வேண்டும் என்பதற்காக, எடுக்கப்பட்டு வரும் விழாவே இந்த விழாவாகும்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.மேலதிக அரச அதிபர் அ.சிவசாமி தனதுரையில்- முதியோர் எமது சொத்துக்கள் ஆவார். முதியோரின் சொத்து என்பது அவர்களின் அனுபவம், பட்டறிந்த தன்மை, பாட்டி வைத்தியம் போன்றவற்றை எடுத்துக் கூறலாம்.

இன்று குறிப்பாக நம் தமிழ் இனத்தின் கலை, கலாசார பண்பாடுகள் சீரழிந்து போவதற்குக் காரணமாக இருப்பது - நம் முன்னோர், முதியோர் அறிவுரைகளைக் கேட்காமல், இளமை முறுக்கில் நாம் செயற்பட்டு வருவதே ஆகும்.

மூத்தோர் சொல்வாக்கு என்று மூதறிஞர்கள் தெரிவித்தனர். இத்னை நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.


முதியோர்களாகிய நாம் சிறுவர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். முதியோரிடம் சிறுவர்களைப் பறறிச் சிந்திக்கும் ஆற்றல் இருக்கிறது. சிறுவர்களின், தம் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கிறார்கள்.

சுதந்திரம், கல்விச் சுதந்திரம், உடல் நலச் சுகாதாரம் பேணல் போன்றவற்றை பெற்றோரே அளிக்க வேண்டும்.

இன்றைய சிறுவர்களின் உரிமைகள் மீறப்படுகிறது, சீரழிக்கப்படுகிறது. இவற்றை நாம் நம் கண்முன்னே பார்த்தும், பாராமுகமாக செய்றபட்டு வருகிறோம்.

இந்த நிலை மாறவேண்டும். முதியோரும் சிறுவர்களாக இருந்து வந்தவர்கள்.

சிறுவர்களும் முதியோராக வரப்போகிறவர்கள் என்ற சிந்தனை நம் எல்லோரது மனதிலும் உணரப் படவேண்டும் எனத் தெரிவித்தார்.



இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சிநெறி ஆரம்ப நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்றபோது யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவசுவாமி உரை நிகழ்த்துவதையும், பயிற்சியில் பங்கேற்கும் பட்டதாரிகளில் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

மூன்றாவது அகவையில்



பெயர் : உ.சுவஸ்திகா
முகவரி : 179/3 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.



பெயர் : க.பானுஜா
முகவரி : சரஸ்வதி வாசம், வதிரி.

ஏழாவது அகவையில்



பெயர் : ம.பிரகலாதன்
முகவரி : பாலன் மனை, புலோலி தெற்கு.


### ஆன்மீக சொற்பொழிவு

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் இடம்பெற்று வரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 'சமயம் காட்டிய ஒழுகக நெறிகள்' என்னும் தலைப்பில் சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் நா. கண்ணதாசன் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

### சிறந்த நூலகமாகத் தெரிவு

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நூலக வாரத்தை யொட்டி இடம்பெற்ற தெரிவில் - யாழ். டிறிபேக் கல்லூரியின நூலகம் சிறநத நூலகமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைக்கான விருது அம்பாறை டி.எஸ்.சேனநாயக்க மத்திய மகாவித்தியாலயத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவுள்ள தேசிய நூலக தின விழாவில் வழங்கப்படவுள்ளது என வலய நூலக இணைப்பாளர் செ. உதயகுமார் தெரிவித்தார். (29)

### மகாபொல சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

2003/2004 கல்வியாண்டில், யாழ்.பல்கலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான மகாபெல புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு அடுத்த மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கு பல்கலைக்கழக கைலாச கலையரங்கில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்களுக்குரிய அழைப்பிதழ்கள் காலக் கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும் என யாழ்.பல்கலைக் கழக நலச் சேவைகள் உதவிப் பதிவாளர் யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

## குண்டுவீச்சில் பலியானோருக்கு நினைவுத் தூபிகள் அமைக்க வணிகர் கழகம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1994 ஆம் ஆண்டு சாவகச்சேரிப் பகுதியில் நடைபெற்ற விமானக் குண்டுவீச்சில், மரணமடைந்த முன்னாள் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் தலைவர் ச.நமசிவாயம் மற்றும் அவருடன் மரணத்தைத் தழுவிய எட்டு பொது மக்களின் நினைவாக சாவகச்சேரி நவீன சந்தைக்கு முன்புறமாகவும், டிறிபேக் கல்லூரிக்கு அருகாகவும் நினைவுத்தூபி ஒன்றைக் கட்டுவதற்கு சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

1994 ஆம் ஆண்டு கேணல் கிட்டுவின் நினைவுத் தூபி திறக்கப்பட இருந்தபோது, அன்றைய தினம் விமானப் படையினர் நடத்திய குண்டு வீச்சில் அதிலே மேற்படி 9 பேரும் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### யூஸ் உற்பத்தி செய்வோர் அனுமதி பெறவேண்டும்

சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதி பெறாது யூஸ் உற்பத்தி மேற்கொள்பவர்கள் உடனடியாக சாவகச்சேரி நகர சபையில் பதிவுகளை மேற்கொண்டு, சுகாதார பகுதியினரின் அனுமதி பெற்று உற்பத்தி மேற்கொள்ள வேணடும் என சுகாதாரப் பகுதியினர் அறிவித்தனர்.

அவ்வாறு அனுமதி பெறாது யூஸ் உற்பத்தி மேற்கொள்பவர்கள் மீது - சுகாதார பரிசோதகர்களால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி கு. ஆறுமுகம் தெரிவித்தார். (290

## சனசமூக நிலையங்களில் தகவல் பெட்டி வைக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட 76 சனசமூக நிலையங்களும் இந்த வருட இறுதிக்கு தகவல் தொடர்பு தகவல் பெட்டிகளை சனசமூக நிலையங்களில் அமைக்கும்படி பிரதேச சபையினர் அறிவித்துள்ளனர்.

சனசமூக நிலையங்களின் தொடர்புகளை இலகுவாக்குவதுடன் பிரதேச வளர்ச்சி, அபிவிருத்தி தொடர்பான செயற்திட்ட தகவல்களை உடனுக்குடன் தெரியபடுத்தவுமே சனசமூக நிலையங்களின் சிவப்பு நிறத்திலான தகவல்பெட்டிகளை அமைக்கவுள்ளனர்.

உரிய காலத்தில் தகவல் தொடர்பு பெட்டிகளை அமைத்து தகவல் பரிமாற்றங்களை இலகுவாக்க. சனசமூக நிலையங்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்குமாறு மானிப்பாய் பிரதேச சபை உள்ளுராட்சி உதவியாளர் கேட்டுள்ளார். (91)

### மந்திகை வைத்தியசாலையில் தாதிமார் பற்றாக்குறை

மந்திகை ஆதார வைத்திய சாலை - பெரும் தாதியர் பற்றாக் குறையுடன் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆதார வைத்தியசாலையில் 90 தாதியர்கள் கடமையாற்ற வேண்டிய போதிலும், 37 பேரே தற்போது கடமையாற்றுகின்றனர்.

இதனால், தாம் தொடர்ச்சியாக கடமையாற்றவேண்டியிருப்பதாக இங்கு பணிபுரிவோர் வேதனையுடன் தெரிவித்தனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக செயற்பட்டு, தாதியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது.

## மீனவருக்கு இழப்பீடுகளை வழங்க அரசு ஆவணங்களைக் கோரியது

(யாழ்ப்பாணம்)

கடந்தகால யுத்த சூழ்நிலைகளால் கடற்தொழில் உபகரணங்களை இழந்த மீனவர்களுக்கு நட்டஈட்டின் ஒரு பகுதியை கொடுக்க அரசு முன வந்துள்ளபோதும், இழக்கப்பட்ட உபகரணங்களின் ஆவணங்களைக் கோருகின்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மீனவர்கள் பெருஞ் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். கடந்தகால யுத்த சூழ்நிலையால் இடம் பெயர்வுகள், அகதி வாழ்க்கைகளை முகம் கொடுத்த மக்கள் உயிரையே பாதுகாக்க முடியாத நிலையே இருந்தது.

இந்த நிலையில் படகு, உபகரணங்களின் ஆவணங்களைக் கோருவதில் எந்த நியாயமுமில்லை. ( )

### வடிகால் திருத்தும் பணி ஆரம்பம்

யாழ் - பிரதான வீதியிலிருந்து குருநகர் கடற்கரை வீதியை சென்றடையும் மவுண்ட்கார்மேல் வீதி, கடற்கரை வீதிச் சந்தியில் பழுதடைந்திருந்த பாரிய வடிகாலை, மூடியமைக்கும் பால வேலை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த வீதியால் செல்லும் பிரயாணிகளும், வாகனங்களும் வேறு வீதிகளைப் பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பால வேலைகளை செய்துமுடிக்க குருநகர் முன்னேற்ற ஐக்கிய முன்னணியால் பல தடவைகள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டபோதும் தற்சமயம் சமுர்த்திக் குழுவாலேயே பால வேலைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அறியப்படுகிறது. (206)

## தென்மராட்சி பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

தென்மராட்சிப் பிரதேசத்திலுள்ள பல பாடசாலைகளில் - ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருவதாக மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகத் தெரியவருகிறது. தென்மராட்சிப் பிரதேசத்தில் மட்டுவில் அமெரிக்கன் மிசன் பாட சாலையில் அதிகளவான ஆசிரியர் பற்றாக்குறை இருப்பதாக இனம் காணப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக் குறையால் கல்விச் செயற்பாடுகள் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாக எமது மக்கள் தெரிவித்தனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதில் கூடிய கவனம் எடுத்து இந்த ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்மாறும் பொதுமக்கள் கேட்டுள்ளனர்.


வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :---------------------------------
முகவரி :---------------------------------
பிறந்த ஆண்டு:---------------------------------



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------
பெற்றோர் ஒப்பம்


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மழலைமொழி பேசும் சிறார்களின் இன்ப, துன்பங்களில் பங்குகொண்டு வருகின்றேன்



## சிநேகிதியே

**குடும்ப முன்பள்ளியின் முன்னாள் தலைமை ஆசிரியரும், நாமகள் பாலர் பாடசாலை ஆசிரியையுமான யோகநாதன் யோகவதியுடனான நேர்காணல்.**

பாடசாலைக் காலங்களில் இருந்தே பொதுப்பணிகளில் என்னை இணைத்துக் கொண்டு வருகிறேன். அதன் ஓர் அங்கமாகவே கடந்த நான்கு வருடங்களாகப் பாலர் பாடசாலை ஆசிரியராகச் சேவையாற்றுகிறேன். மழலைமொழி பேசும் அவர்களின் இன்ப, துன்பங்களில் பங்கு கொண்டு, என்னால் இயலுமானவரை ஒவ்வொரு பிள்ளைகளையும் முழுக்கவனத்துடன் முழுமையாக்கும் நோக்கிலேயே ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றேன்.

நாமகள் சனசமூக நிலையத்தின் கீழ் இயங்கிவரும் இந்தப் பாலர் பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை, சிறுவர் பூங்கா இல்லை, விளையாட்டுப் பொருட்கள் இல்லை. போதிய வசதி வாய்ப்புக்களின்றி, கட்டட தளபாட வசதி இருப்பதால், பெரும்பேறு என நினைத்து மனநிறைவோடு சேவையாற்றி வருகிறேன். ஆனால், திருப்தியான கல்வியைத் தவிர வேறு கற்றல் செயற்பாடுகளைப் பெறமுடிவதில்லை.

ஆசிரியர் ஒருவரால் 15 - 20 வரையான மாணவர்களுக்கே கல்வி கற்பிக்க முடியும். இங்கு 30 மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். எனக்கு உதவியாக எனது சகோதரியும் கடமையாற்றி வருகின்றமை எனக்கு பெரும் மனநிறைவைத் தருகின்றது.

ஊதியத்தை நோக்காகக் கொண்டு முன்பள்ளி ஆசிரியர்கள் ஒரு போதும் செயற்படக்கூடாது. சிறுவர்களின் குறும்புகளும், விளையாட்டுக்களுமே பூரண திருப்தியாக அமைகின்றது.




இந்த முன்பள்ளி மாணவர்களுடன் நாளாந்தம் 3 - 4 மணித்தியாலங்கள் வரை செலவிடுகின்றேன். இதில் வீட்டில் நடக்கும் சில சம்பவங்களைக்கூட இவர்கள் எம்முடன் பகிர்ந்து கொள்கிறார்கள். இதிலிருந்து பார்க்கும்போது, இவர்கள் எம்மீது எவ்வளவு நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

எனக்கு நாமகள் சனசமூக நிலையத்தினரது ஒத்துழைப்பும், பெற்றோரது ஆதரவும் நிறையவே உண்டு. இதனாலேயே நான் தொடர்ந்து சேவையாற்ற முடிகிறது.

சில பிரதேசங்களிலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கென சங்கங்கள், வர்த்தக நிலையங்கள் - குறித்த தொகை பணத்தை வழங்கி வருகின்றன. இவ்வாறு எல்லா முன்பள்ளிகளிலும் வழங்க வேண்டும்.

இதற்குப் பொறுப்பான அமைப்புக்களும் அவை சார்ந்த அலுவலர்களும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். வசதி வாய்ப்புக்களின்றி இயங்கும் முன்பள்ளிகளை இனங்கண்டு, அவற்றுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். தனியே சிறுவர் விளையாட்டு, சிறுவர் கண்காட்சிகளை நடத்துவதில் எதுவித பலன்களையும் அடைய முடியாது.

திருப்திகரமான, மகிழ்ச்சியான கற்றல், கற்பித்தல் இடம்பெறுகின்ற போதிலும், போதிய வசதி வாய்ப்புக்கள் இன்மையாலும் முழுமையாக சிறுவர்களைத் திருப்திப் படுத்த முடியாத நிலை இந்த முன்பள்ளிகளில் காணப்படுகிறது. இரண்டு வருடங்களுக்குப் பிள்ளைகளை, முன்பள்ளி ஆசிரியர்களை நம்பியே பெற்றோர் அனுப்புகிறார்கள். எனவே, ஆரம்ப அறிவை சரிவரப் புகட்ட வேண்டியவர்களாக நாம் இருப்பதால், எமக்கான வசதி வாய்ப்புக்களை உரியவர்கள் ஏற்படுத்தித்தர வேண்டும்.

இதன் விளைவாக எதிர்காலத்தில் பல பயனுள்ள கல்விமான்களை, துறைசார் வல்லுநர்களை இந்த சமூகம் உருவாக்கிக் கொள்ள முடியும்.

விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகளின்போது சிறுவர்களை முதன்மைப் படுத்துவதுபோல், அவர்கள் அனைவருக்கும் பரிசுப் பொருட்களையும், சான்றிதழ்களையும் வழங்க வேண்டும். இதனால் தொடர்ந்து வரும் காலங்களிலும் சிறுவர்கள் நிகழ்ச்சிகளில் முன்னுக்கு வருகின்ற நிலை ஏற்படும். இவ்வாறான நடைமுறைகளை கடைப்பிடிக்கும்போது, சிறுவயது முதலே உற்சாகத்துடன் போட்டிகள், கலை நிகழ்வுகளில் பங்குகொள்ள ஆர்வம் ஏற்படும். சம்பந்தப்பட்டவர்கள் இவ்வாறான செயற்பாடுகளை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்.

தற்போது சுமார் 750 முன்பள்ளி ஆசிரியர்கள் - தொண்டர் என்ற அடிப்படையில் சேவையாற்றுகிறார்கள். இவர்களின் சேவைக் காலம், கல்வித்தரம் போன்றவற்றை கவனத்திற்கொண்டு நிரந்தரமாக்கப்பட வேண்டும். முக்கிய பணிகளைச் செய்பவர்களில் முன்பள்ளி ஆசிரியர்களும் அடங்குவர். சிறுவர்களின் கோபம், அழுகை, சிலவேளைகளில் இயற்கை உபாதைகளைக்கூட கவனிக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

முன்பள்ளிகளை முழுமையாக்கி ஆசிரியர்களின் தரத்துக்கு ஏற்ப அரச நியமனங்கள் வழங்கி, அவர்களது சேவையை மதிக்க வேண்டும். எதிர்கால இருள் அகற்றுவர்களுக்கு ஒளி ஏற்றும் எங்கள் வாழ்வில் ஒளியேற்ற பொறுப்பானவர்கள் முன்வர வேண்டும் என அவர் தெரிவித்தார். ☆

**முன்பள்ளி ஆசிரியர்கள் காலத்தின் தேவை உணர்ந்து, கடமை உணர்வுடன் ஊதியம் இன்றி கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறார்கள். இவர்கள் பெற்றோர், நலன்விரும்பிகளின் சிறுதொகை அன்பளிப்பை பெற்றே தமது பங்களிப்பை இளம்பிராயத்தினருக்கு வழங்கி வருகின்றனர். ஒவ்வொரு பிள்ளையும் மூன்று வயதுமுதல் ஐந்து வயது வரை விரும்பியோ விரும்பாமலோ பாலர் பாடசாலை சென்று, தனது ஆரம்ப கல்விக்கு அடித்தளத்தை அமைத்துக்கொள்கிறது.**

**இரா–வின்**

# இன்றைய சூழலில் ஆடம்பரமான வாழ்வில் பெண்களின் கலவை



ஒவ்வொருவரையும் நுகர்வோர்களாக மாற்றுவதற்கு கலாசார ரீதியில் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. இன்றைய குழந்தை பிறந்தவுடனேயே நுகர்வோனாக மாறிவருகின்றது.

இதற்குக் காரணம் மக்கள் நுகர்வோர்களாக மாறும்போதுதான், பொருட்களை அவர்களிடம் விற்கமுடியும். பெண்களை நுகர்வோர்களாக மாற்றினால்தான் தங்கள் வியாபாரம் நன்றாக நடக்கும் என்பதில் உறுதியாகவுள்ளனர் வியாபாரிகள்.

இன்றைய பெண்களின் சிந்தனைப் போக்கு பெருமளவில் மாறிவருகிறது. வாழ்ந்து கொண்டிருக்கும் சூழல்தான் அவர்களின் சிந்தனைகளில் பெருமளவு செல்வாக்குச் செலுத்துகிறது. புதிய மாற்றங்கள், மறுபுறம் விளம்பரங்கள் போன்ற வற்றால் எடுக்கப்படும் கலாசாரத் தாக்குதல்கள். இவற்றின் பிடியில்தான் இன்றைய பெண்கள் இருக்கின்றனர்.

## பெண்கள் முன்வைக்கும் மதிப்பீடுகள் என்னென்ன?

கல்வியோ, வேலையோ இனி அரசாங்கத்தை நம்பக்கூடாது. உங்களின் தகுதிக்கேற்ப வேலைகளைத் தேடிக்கொள்ளலாம். இத்தகைய சூழலில் வளரும் பெண்கள் தங்கள் கல்வி, வேலை பற்றிய புதிய மதிப்பீடுகளை உருவாக்கிக் கொள்கின்றனர்.

பெண்கள் தங்களைச் சுற்றி எவ்வளவு நுகர்வுப் பொருட்களை வைத்திருக்கின்றார்களோ அப்பொழுதுதான் அவர்களின் செல்வாக்கு நிர்ணயிக்கப்படுகின்றது.

கையடக்கத் தொலைபேசி, அதிநவீன மோட்டார் சைக்கிள், செலவு செய்வதற்கு ஏராளமான பணம், கடைகளில் சாப்பாடு, அதி நவீன ஆடையணிகள் இவைதான் இன்றைய மேல்நாட்டுப் பெண்களின் கனவாகவுள்ளது. இதை நோக்கித்தான் அடியெடுத்து வைக்கிறார்கள்.

இந்த எண்ணப்போக்கை வளர்த்துவிடுவதில் விளம்பரங்களும், பத்திரிகைகளும் பெரும்பங்கு வகிக்கின்றன. விளம்பரங்கள் நுகர்வுக் கலாசாரத்தை மிகவும் நுட்பமான முறையில் இன்றைய பெண்களுக்குள் செலுத்தி அவர்களை மூளைச் சலவை செய்துவிடுகின்றன.

இன்றைய அரசியல் மற்றும் கலாசாரச் சூழல்தான் பெண்களின் மனித உறவுகளையும் தீர்மானிக்கின்றன. இன்றைய பொருளாதாரச் சூழல் பெற்றோர்களையே பொருளாதாரச் சுமைகளாகப் பார்க்கவைக்கின்றன. காலங்காலமாக இருந்துவரும் தலைமுறை இடைவெளி ஒருபுறமிருக்க, இந்தப் பொருளாதாரப் பிரச்சினையும் சேர்ந்துகொள்ள, பெண்களுக்கான வாழ்க்கை வளர்ச்சியின் இடைவெளி மேலும் அதிகரித்து வருகின்றது.

இலக்குத்தான் முக்கியம் வழிமுறைகள் முக்கியமல்ல என்பதன் சிந்தனைப் போக்கு பெண்கள் மத்தியில் பரவி வருகின்றது. ஆனால், எத்தகைய சூழலிலும் மண்ணை நேசித்தும், சமூகப் பிரச்சினைகளை எதிர்த்தும் போராடி வருகின்றார்கள்.

புதியதொரு நாட்டை உருவாக்கும் இலட்சியக் கனவோடு உழைத்துவரும் பெண்களும் இருக்கின்றார்கள். இவர்களால் பெரும்பாலானோர் சமூகத்தில் நலிந்த பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். தங்கள் வாழ்க்கை அனுபவங்களால் உணர்ந்தவர்கள். சமூக அநீதிகளையும், கொடுமைகளையும் அப்படியே ஏற்றுக்கொண்டு மௌனமாகப் போக விரும்பாதவர்கள். இவர்கள் நகர்ப்புறங்களிலும், கிராமப்புறங்களிலும் பரவிக்கிடக்கிறார்கள். [illegible] காரணிகள் இந்தப் பெண்களிடம்தான் இருக்கின்றன. ☆

# ஆரோக்கியமான குழந்தைக்கு



ஆரோக்கியமான குழந்தையைப் பெறுவதென்பது - குறித்த நாட்கள் முடியும் வரை குழந்தையின் வளர்ச்சி அத்தியாவசிய மாகும். பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்களை மீறி வளர்ச்சி குறைவான குழந்தைகள் பிறக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. இவ்வாறு -

**வளர்ச்சி அடையாத குழந்தைகள் பிறப்பது ஏன்? அவ்வாறு பிறப்பதற்கான காரணங்கள்.**

தாயின் கர்ப்பகாலம் 37 வாரங்கள் (259 நாட்கள்) பூர்த்தி அடைய முன் குழந்தை பிறக்குமாயின், அந்த குழந்தை முற்றாக வளர்ச்சியடையாத குழந்தை என குறிப்பிடப் படுகிறது. சாதாரணமாகப் பிறக்கும் குழந்தையின் நிறை 2.5 கிலோகிராமாகும். இதற்கு குறைவாகப் பிறக்கும் குழந்தை வளர்ச்சியற்ற குழந்தையாக பிறக்கின்றது. இதற்குப் பல காரணங்களால் ஏற்படும் வளர்ச்சியற்ற குழந்தைகளின் பிறப்பு ஆகும்.

***வளர்ச்சி குறைவாக குழந்தைகள் பிறப்பதற்கு காரணமாக இருக்கும் காரணிகள் பிரதானமாக 4 வகையாக பிரிக்கலாம்.***

1) தாய் சம்பந்தமான பிரச்சினைகள்.
2) பாதிப்பு ஏற்படும் முறைகள்.
3) வளர்ச்சியின் போது ஏற்படும் கஷ்டங்கள்.
4) சிறுநீரகத்தின் பாதிப்பு.

தாய் சம்பந்தமான பிரச்சினைகள் என்னும்போது. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் இருக்கும் பாதிப்புக்கள் இதற்கு முக்கிய காரணமாகும். அதேபோல் பல தாய்மார்கள் மந்த போஷணம், இரத்தக்குறைபாடுகள் மற்றும் வெவ்வேறு நோய்களின் பாதிப்புக்களால் வளர்ச்சி குறைவான குழந்தைகள் பிறக்கின்றன.

**★ தகுந்த வயதைப் பூர்த்தியடையும் முன் திருமணம் முடித்தல்.**

சாதாரணமாக கரு உருவாக்கக் கூடிய தாயின் வயது 18 ஆகும். இந்த வயதைப் பூர்த்தியடையமுன் திருமணம் செய்யும் போது பிரதிபலனாக வளர்ச்சியற்ற குழந்தைகள் பிறக்கின்றன.

**★ குழந்தைகளின் பிறப்புக்களுக்குள் தகுந்த இடைவெளி இல்லாமை.**

வயது குழந்தைகள் பிரசவிக்கும்போது, இரு குழந்தைகளுக்கு இடையில் சாதாரணமாக இரண்டு வருட இடைவெளி இருக்க வேண்டும். இவ்வாறான இடைவெளி இல்லாமல் பல குழந்தைகள் கால இடைவெளியின்று பிரசவிக்கும்போது தாயும், பிள்ளையும் மிக பயங்கரமான நிலைக்கு ஆளாகுகின்றனர். இது வளர்ச்சியற்ற குழந்தைகள் உருவாகுவதற்கு முக்கிய காரணமாகும்.

**★ தாயின் நோய்களும் மற்றும் பழக்கவழக்கங்களும்.**

ஒரு தாய்க்குப் பல காலமாக தொடர்ச்சியாக இருக்கும் உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்களாலும் அல்லது கர்ப்பவதியாக இருக்கும் காலத்தில் ஏற்படும் இரத்த அழுத்தம் போன்ற நோய்களாலும் விசேடமாகக் கர்ப்பகாலத்தில் ஏற்படும் சிறுநீர் சம்பந்தமான பல நோய்களாலும் வளர்ச்சியற்ற குழந்தை பிறக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

**★ கர்ப்பப்பை சம்பந்தமான பாதிப்புக்கள்**

இரட்டை குழந்தைகள் உருவாகுதல். கர்ப்பப்பையில் உள்ள பாதிப்புகள் மற்றும் கர்ப்பப்பையின் வெளிப்புறத்தில் ஏற்படும் பிரச்சினைகளாலும் வளர்ச்சியற்ற குழந்தைகள் உருவாகின்றன.

கருவில் ஏற்படும் பாதிப்புக்கள், நோய்த் தன்மை மற்றும் தாயினதும் மற்றும் குழந்தையின் இரத்த [illegible] பொருந்தாத காரணத்தாலும் வளர்ச்சியற்ற குழந்தைகள் உருவாக [illegible]கின்றது.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம் யாழ்ப்பாணம்

# நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறார்களும், எதிர்காலமும்

(சென்றவாரத் தொடர்ச்சி....)

இது குடும்பச் சீரழிவுக்கு இடம் கொடுத்தது. இன்னும் ஒரே வீட்டில் பல குடும்பங்கள் வாழும் நிலையும் ஏற்பட மரபு பிறழலுக்கான வாய்ப்பும் பெருகியது. ஆண், பெண் இருபாலாரும் தவறான நடத்தையால் தமது குடும்பக் கட்டுமானத்தைத் தாமே உடைக்கும் நிலைக்கு ஆளாகினர். இதனால் சிறார்கள் ஆதரவற்று நின்றனர். உறவினரும் இத்தகைய உடைந்த குடும்பங்களின் சிறாரை அரவணைக்கப் பின்னின்றனர். பண்பாட்டுச் சீரழிவால் திருமணம் என்ற மரபான சடங்குப் பிணைப்பும் தேவையற்றதெனக் கருதப்பட்டது. இருவர் இணைப்புக்குச் சாட்சியற்ற நிலையில் தந்தை யாரென்று அறியாத குழந்தைகள் பல - சமூகத்திலே பிறப்பெடுத்தன. அவர்களைப் பண்பாட்டுச் சீரழிவின் சின்னங்களாகவும் பார்க்கின்ற புதியதொரு பார்வையும் உருவாகிற்று.

இந்த நிலை ஆதரவற்ற சிறார்களை நிறுவனம் ஒன்றுடன் இணைக்கவேண்டும் என்ற கருத்துத் தோற்றம் உடனடிக் காரணமாயிற்று. சிறார்கள் நிறுவனமயப்படுத்தப்பட்டால், அவர்களை அந்த நிறுவனம் பொறுப்பேற்று, வளர்த்து உருவாக்கும் என்ற கருத்து மேலோங்கியது. இதற்கென அமைப்பு நிலையில் தனித்துவமான நிறுவனங்கள் தோன்றின.

### சிறார்களை நிறுவனத்தில் இணைக்கும் முறைமை

சிறாரை ஒரு நிறுவனத்தில் இணைக்கும் போது பல விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சிறாரைப் பொறுப்பேற்கும் நிறுவனமே எல்லா விடயங்களையும் சீர்செய்ய வேண்டும். 5 விடயங்கள் அவற்றுள் குறிப்பிடவேண்டியவை -

**01. சிறார் உள, உடல் நலம் பேணல்**

உடைந்த குடும்பங்களிலிருந்து சிதறிப் போன சிறார் உளமும், உடலும் உரிய முறையில் பேணப்படவேண்டும். தனிமையும் எதிர்காலமும் பற்றிய அச்சமும் அவர்களுடைய உடலையும், உள்ளத்தையும் பெரிதும் பாதித்திருக்கும். எனவே, அவர்களை இந்தச் சூழலிருந்து மீட்டெடுத்து, மகிழ்வான சூழலிலே வளரச் செய்வதே சாலச் சிறந்தது. குடும்பச் சூழல் பற்றிய உணர்வற்ற குழந்தைகளாயின் இது எளிதாக இருக்கும். ஆனால், குடும்பச் சூழல் பற்றிய உணர்வும், நினைப்பும் கொண்ட சிறார்களாயின் மிகவும் கடினமான செயற்பாடாய் அமையும். அவர்களது உளநலப் பாதிப்பை உணர்ந்து, உடல்நலம் கெடாத வகையில் பராமரிக்கவேண்டும்.

**02. உணவு, உடை, மருத்துவத் தேவைகளை உடனடியாகச் செய்தல்**

சிறார்களின் பராமரிப்பு நிலையில், அவர்களின் அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவுசெய்யப்பட வேண்டும். பெற்றோரைப் பிரிந்து வாழும் நிலையில், உணவையே வெறுக்கும் சிறாரும் உள்ளனர். அவர்களைப் பரிவுடன் கவனித்து, உடல் நலத்துக்கு ஏற்றவாறு உணவளிக்கும் பாரிய பொறுப்பு முகாமையாளர்களுக்கு உரியது. உடை நிலையில், நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறாரை இனங்கண்டு கொள்ளும் வகையில் உடைகளை அணியச் செய்வது தவறு என்று தற்போது கருதப்படுகிறது. ஆனால், நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறாரிடையே உடைநிலையில் வேறுபாடு இருப்பது அவர்களுடைய உள நலத்தைப் பாதிக்கிறது. சிறாரிடையே தகுதிவேறுபாடு தோன்றவும் இது வழிவகுக்கலாம். குடும்பச் சூழலில் நிறுவன அமைப்புச் செயற்பட்டால், சிறாரது உடை சிக்கலாக அமையாது. இன்னும்



நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறாருக்கு உடைக் கொடை செய்வோர் சீருடை அமைப்பை விரும்புவதும் உண்டு. எனவே சிறாரின் மகிழ்ச்சியையே நோக்காகக் கொண்டு சிறாரின் ஆடையை வழங்குவதே சிறந்தது.

**03. கல்விக்கான சூழலை உருவாக்கலும் பாடசாலைக் கல்வி வழங்கலும்**

நிறுவனமயப்படுத்தப்பட்ட சிறாருக்கு கல்விக்கான சூழலை அமைத்துக் கொடுப்பது, மிகப் பெரிய பொறுப்பாகும். சீரழிந்த குடும்பச் சூழலால் கல்வி நிலையில் பின்தங்கிய சிறாருக்கு முதலில் அவர்கள் விருப்போடு கல்வியைக் கற்க ஒரு நல்ல சூழலை உருவாக்குவது முகாமையாளரது பொறுப்பாகும். வயதுக்கேற்ற கல்வியைப் பெறாத சிறாருக்கு தனித்துவமான கல்விப் பயிற்சி வழங்கப்படவேண்டும். புற நிலைக்கற்கை நெறியும் இன்றியமையாதது. சிறாரின் அறிவு நிலைக்கேற்ற கல்விப்பயிற்சியைத் திட்டமிட்டு வழங்கவேண்டும். பாடசாலைக் கல்விப் பயிறசியளிக்கும் வாய்ப்பை நிறுவனமே ஒழுங்கு செய்யவேண்டும். சிறுவர் காப்பகங்களிலே அவர்களுக்கான கல்வியை வழங்குவதே நல்லது எனக் கருதுவோரும் உள்ளனர். ஆனால், காப்பகங்களிலே வாழும் சிறார்கள் பாடசாலை சென்று, கல்வி பயிலும்போது புற உலகத்தையும் அதன் நடைமுறைகளையும் அறிய வாய்ப்புண்டு. எனினும் இந்தச் சிறாரைப் பிரித்து நோக்கும் நிலையும் உருவாக இடமுண்டு என்பதை முகாமையாளர் உணரவேண்டும். சிறுவர் காப்பகச் சிறார் எனவும், ஊர்ச்சிறார் எனவும் அழைக்கும் பழக்கம் உண்டு. இது நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறாரைப் பாதிப்பதாகும். அதனால் பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் இந்தநிலை ஏற்படாத வண்ணம் விழிப்பாயிருக்க வேண்டும். பாடசாலைக் கல்வியைக் காப்பகச் சிறார் விரும்பாமைக்கு இதுவும் ஒரு காரணம் என்பதை சிறாரின் நலனில் அக்கறை கொண்ட அனைவரும் உணரவேண்டும்.

**04. செயற்பாட்டுத் திறன் வளர, ஏற்ற செயற் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் பாங்கு.**

ஆதரவற்ற சிறாரின் ஆற்றல்களை வெளிப் படுத்தும் செயற்திட்டங்கள் அவசியம். அவர்கள் வீட்டையும், உறவுகளையும் நினைந்து உருக் குலைந்து போகாமல் ஏதாவது செயற்பாட்டில் முனைந்திருப்பதே நல்லது. பொழுது போக்காக மட்டுமன்றி பயன் பெறும் நிலையில் பல பயிற்சிகளை நாம் வழங்கலாம். தோட்டம், தையல், கைவினை, கலைகள் போன்றவற்றில் பயிற்சிகளை வழங்கும்போது சிறாரின் உள்ளம் பண் படையும். தனது கைவினை ஆற்றல் கண்டு தானே மகிழ்வுறும். எதிர்காலத்துப் பொருள் தேட்டத்துக்கும் இந்தப் பயிற்சிகள் உதவும் என்பதைச் சிறார் உணரும் வகையில், சுய தொழில் வழிகாட்டியாகவும் செயற்படுத்தப் படவேண்டும். சிறாரின் ஆற்றல் நிலையறிந்து அவர்களை மேலும் ஊக்குவிக்கவேண்டும். எதிர்காலத்தில் அவர்கள் வாழ்க்கையிலே தொழில் வாய்ப்பைப் பெறச் சிறுவர் காப்பகமே தொழில் நிறுவனங்களை இந்தப் பயிற்சிகளின் மூலம் உருவாக்கி, அவர்களது எதிர்காலத்தைச் சீர்செய்ய முடியும். இதனால் எதிர்காலம் பற்றிய சிறாரின் அச்சத்தைப் போக்கமுடியும். இன்னும் சிறார் சமூகத்துக்குப் பயன்தரும்வகையில் தமது ஆற்றலையும், செயற்திறனையும் பயன்படுத்தலாம்.

**05. வழிபாட்டால் ஒன்றிணைத்தல்**

வழிபாடு மக்களை ஒன்றிணைக்கும் சிறந்ததொரு நிலையாகும். தமது முன்னோர்களின் வாழ்க்கையின் அடித்தளமான, நம்பிக்கையான நமது வழிபாட்டை நடைமுறைகள் பற்றிய தெளிவு - நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறாருக்கு வழங்கப்பட வேண்டும். மதநம்பிக்கைகள் வேறுபட்ட சிறுவரை ஒரு நிறுவனத்தில் ஒன்றிணைத்துப் பராமரிப்பது ஏற்றதல்ல. பெற்றோர் மூலம் முன்னரே அவர்கள் பெற்றிருக்கும் சமய அறிவையும், நம்பிக்கையையும் சிதைக்காத வண்ணம் நிறுவனம் செயற்பட வேண்டும். சிறார்கள் அனைவரும் வழிபாட்டு நடைமுறைகளில் பங்குகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும். தூய்மையும், அழகும் வழிபாட்டில் முதன்மையானவை. அதைச் சிறார்கள் கைக்கொள்ள ஏற்ற செயற்திட்டங்கள் தேவை. வழிபாட்டில் நிவேதனமாக அமையும் மலர்களைச் சிறாரே தமது முயற்சியால் பெறுவதற்கு வழிபாடலே சிறந்தது. வெள்ளை, சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை எனப் பல்வேறு நிறங்களைச் சீராக ஒன்றிணைக்கும்போது, அழகான மலர்மாலை கட்டும் பயிற்சியால் சிறார்கள் பயன்பெற நல்ல வாய்ப்புண்டு. எனவே, அத்தகைய நிறமான மலர்களை அவர்கள் தமது கைகளால் பயிரிட்டு, வளர்த்தெடுத்து மலர்களைப் பறித்து மாலையாக்கும்போது தமது கலைத்திறனை வளர்க்க வாய்ப்புண்டாகிறது. அத்துடன், வழிபாட்டில் இசையும், இசைக் கருவிகளும் இணைந்திருப்பதால் சிறார் உள்ளம் எளிதாக வழிபாட்டில் இணையலாம். எனவே, இசையின் வசமாகி சிறார்கள் வழிபாட்டில் இணைந்து, தமது உள்ளத்திலே உறைந்து கிடக்கும் அச்ச உணர்வைப் போக்கி மகிழ்வாக இருப்பர். அவர்கள் உடல் நலமும், உள நலமும் சீர்பெறும். ஆன்ம பலம் அவர்களுக்கு அவர்களுக்கு என்றும் துணையாக இருக்கும்.

**சிறார்கள் எதிர்காலச் சவால்களை ஏற்கப் பயிற்றுதல்**

நிறுவன மயப்படுத்தப்பட்ட சிறார்களுக்கு எதிர்காலத்தில் பல சவால்கள் உண்டு. ஆதரவற்ற நிலையில் சமூகத்தால் சற்றுக்கீழ் நிலையில்வைத்து நோக்கப் படும்.

இந்தச சிறார்கள் சமூகத்தை தம்முடைய ஆற்றல்களால், தம் வசப்படுத்தவேண்டும். அதற்கெனச் சிறப்பான பயிற்சிகளை அவர்கள் பெறவேண்டியுள்ளது.

**01. கல்வி மேம்பாடு**

ஆதரவற்ற சிறார்களுக்கு கல்வி மேம்பாடு என்பது, பெரியதொரு சவாலாகவே உள்ளது. பெற்றோரின் இழப்பும், வறுமையும் இந்தச் சிறார்களின் கல்வியை இடைநிறுத்தும்போது, அதைத் தொடரும் வாய்ப்பைச் சிறார்கள் இழந்துவிடுகின்றனர்.

தமது எதிர் காலத்துக்கு இன்றியமையாத கல்விச் செல்வத்தைப் பெற முடியாத துன்ப நிலைக்கு ஆளாகின்றனர். சிறுவர் காப்பகங்கள் இந்தக் கல்விச் செல்வத்தைப் பெறுவதற்குரிய வாய்ப்புக்களை இடைநிறுத்துவதும் உண்டு..

சிறார்களின் பராமரிப்பு வயதெல்லையை வரையறை செய்து அவர்களை காப்பகங்களை விட்டுவெளியேற்றுவதும் உண்டு. எடுத்துக்காட்டாகக் கல்விப் பொதுத் தராதர நிலையிலிருந்து உயர் தரத்துக்கு அவர்கள் வரும்போது தமது உயர் கல்வி வாய்ப்புக்கான தடையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. கல்வி வாய்ப்புக்களைச் சிறுவர் காப்பகங்கள் மேலதிக பொருட செலவு எனக்கருதி தொழிற்படுவதால், உயர் கல்வி மறுக்கப்பட்டு சிறாருக்கு உளத் தாக்கம் ஏற்படுகின்றது.

தனது திறமையைப் பிறர் கருத்திற் கொள்ளவில்லையே என்ற எண்ணம் வலுப்பட அவர்கள் உள்ளத்தில் வன்முறையான எண்ணங்கள் தோன்றுகின்றன. இத்தகைய எண்ணங்கள் செயற்பாடாக மாறாதிருக்க, சிறுவர் காப்பக முகாமையாளர் செயலாற்ற வேண்டும். சிறாரின் உயர் கல்விக்கான கொடைத்திட்டங்களை வகுத்து அதற்கு உதவக் கூடிய பிற கல்வி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு சிறாருக்குரிய வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். கல்வி மேம்பாட்டால் காப்பகங்களிலே பொறுப்பு ஏற்கப்பட்ட சிறார் - எதிர்காலத்தில் சிறந்த மனிதர்களாக சமூகத்தோடு இணைந்து கொள்ளமுடியும். பிறர் பயன் பெற அவர்கள் தமது கல்விச் செல்வத்தைப் பயன்படுத்தும் பயிற்சியை முகாமையாளர்கள் திட்டமிட்டு வழங்குவதால் சமூகம் பயன் பெறமுடியும்.

(தொடரும்...)

**மனோன்மணி சண்முகதாஸ்**

# வளரிளம் பருவம் சவால்களை எதிர்நோக்கிய பயணம்



(சென்றவாரத் தொடர்ச்சி...)

மனித வாழ்வின் சுழற்சியில் ஒவ்வொருவரும் தனியொரு அடையாளத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனி மனித வாழ்வின் கூறுகள் சிதறடிக்கப்படுவதையும், அடையாளக் குழப்பத்தை தவிர்க்கவும் வேண்டுமென்பார் எரிக்சன். மேலும் இந்த வளரிளம் பருவமானது தனிச் சிறப்புடைய அடையாளக் குறியீடாய் உள்ளது. குழந்தைப் பருவத்துக்கும், வளர்ந்த பருவத்துக் கிடையேயான ஒரு வாழ்க்கைப் பாதையாக வளரிளம் பருவம் உள்ளது.

சுதந்திரத்தையும், சமூக ஆக்கவள உடைமையையும் அடையும்போது, பால் உணர்வு ஈடுபாட்டுக்கும், உளச் சமூக முதிர்ச்சிக்கும் வழிகாட்டும் பருவம்தான் வளரிளம் பருவம். அதே வேளையில், தவறான வரையறைக்குக் கொண்டு செல்லும் உடல் மற்றும் உணர்ச்சி சார்ந்த நிலையோடு தொடங்குகின்ற காலக் கணிப்பு முறையின் பருவகாலம்தான் வளரிளம் பருவம். இந்தப் பருவம் நம் உடல், உள மற்றும் சமூக மாற்றங்களோடு இணைந்திருக்கும்.

பல்வேறு மாறுதல்களை உள்ளடக்கிய இந்தப் பருவத்தின் சாதக, பாதகங்களைத் தெரிந்து கொள்வது, உங்களை நீங்களே அறிந்து கொள்வதற்கும், வழி நடத்துவதற்கும் உதவியாய் இருக்கும்.

உணர்வாற்றலைச் சார்ந்தது போலத் தோன்றும் இந்தப் பருவம் - ஒழுக்க நெறி முறைகளில் பல வழிவகைகளையும், ஏற்ற இறக்கங்களையும் கொண்டுள்ளது. நமது சமூக வாழ்வில் வளரிளம் பருவமென்பது குறிப்பிடத்தக்கதொரு காலஅளவு அல்ல என்கிறார் ஷெல்டன். உடலளவிலும், உள்ளத்திலும் மாற்றங்களை ஏற்படுத்தும் இந்த வளரிளம் பருவத்தைப் பற்றிய நமது அறிவு முழுமையானதாக இல்லை. இது வளரும் எமக்கு மட்டுமன்றி, நமது பெற்றோருக்கும், பெரியோர்களுக்கும் கூட இல்லை என்பது தான் இன்றைய சமூக யதார்த்தம். இத்தகைய நிலையில்தான் நாம் புறத் தூண்டுதலுக்கு ஆளாகிறோம். சமயம், அரசியல், அறிவியல் போன்ற எல்லாவிதமான கருத்துருவாக்கங்களுக்கும், விழுமியங்களுக்கும் உணர்ச்சி பூர்வமாக செயலாற்றுகிறோம். உணர்ச்சிகளால் ஆளப்படும் நாம் சூழலுக்கேற்றவாறு தகவல் அமைத்துக்கொள்ள, நம்மையே தயார் படுத்திக் கொண்டாலும், சில நேரங்களில் நமது செயற்பாடுகள் அமைதியான செயலற்ற தன்மையாக இருக்கின்றன.

இத்தகைய, உடல், உள மற்றும் சமூக மாற்றங்கள் எம்மில், பத்து வயது முதல் இருபது வயதுக்குள் ஏற்படுகின்றன. இளமையில் சாதிக்கத் துடிப்பவர்கள், தங்களைத் தாங்களே, உடலளவிலும், மனதளவிலும் தயார்படுத்திக் கொள்ள சிறந்ததொரு பருவ காலமே வளரிளம் பருவம். இது அஞ்சி அஞ்சி எம்மை அழித்துக் கொள்வதற்கான பருவமல்ல. ஆக்கற்ற சமூக மாற்றத்தை எமக்குள் விதைக்கும் பருவம். *

நன்றி - அரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வட்டக்கச்சி பிரதேச வீதிகள் புனரமைக்கப்படாத நிலையில்

கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பிரதேச வீதிகள் மிக நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றன.

வட்டக்கச்சிப் பிரதேசத்தின் பிரதான வீதி முதல் - சிறு வீதி வரை இதுவரையில் புனரமைப்புச் செய்யப்படவில்லை.

அத்தோடு, இந்த வீதிகளிலுள்ள பாலங்கள், மதகுகள் என்பனவும் மிக மோசமாகப் பழுதடைந்து, ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், இந்தப் பகுதி மக்கள் பிரயாணங்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### பெற்றோருக்கான கருத்தரங்கு

துணுக்காய் வலயப் பாடசாலை மாணவர்களின் பெற்றோருக்கான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த வலயப் பாடசாலை மாணவர்களின் கல்வியை மேம்படுத்துவது தொடர்பான கருத்தரங்கை - துணுக்காய் கல்வி வலய பணிமனையின் தமிழீழ மாணவர் அமைப்பு மற்றும் ஜீ.ரி.இசற் நிறுவனம் ஆகியன இணைந்து மேற்கொண்டன.

இந்தக் கருத்தரங்கு துணுக்காய் தேறாங்கண்டல், ஐயன்குளம் ஆகிய பாடசாலைகளில் இடம்பெற்றது.

### சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப்பட்டறை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்று அண்மையில் இடம்பெற்றது.

பூநகரி - முழங்காவில் அபிவிருத்தி நிறுவன மண்டபத்தில் இடம்பெற்ற சிறுவர் உரிமை தொடர்பான பயிற்சிப் பட்டறையில் -மாதர் சங்கப் பிரதிநிதிகள், பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

செட்டிகுளம் பிரதேச செயலர் பிரிவில்

# நலன்புரி நிலையங்களில் வாழும் குடும்பங்களுக்கு காணி வழங்கல்

வவுனியா - செட்டிகுளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழுள்ள நலன்புரி நிலையங்களில் வாழ்பவர்களுக்கு, காணிகள் வழங்கப்பட்டு, மீளக் குடியமர்த்தப்பட்டு வருகின்றனர்.

1994 ஆம் ஆண்டுக்கு முன்னர் இராணுவத்தினர் மேற்கொண்ட போர் நடவடிக்கை காரணமாகப் பல்வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்து அடம்பன்குளம், பாவற்குளம் ஆகிய நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை - செட்டிகுளம், மன்னார் வீதியில் உள்ள மினிக்பாம் பகுதியில் குடியமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

இதன் முதற்கட்டமாக, கடந்த 15 ஆம் திகதி இதற்கான சேவை பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, முதற்தடவையாக 150 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இவர்களுக்கு அரை ஏக்கர் வீதம் காணிகள் வழங்கப்பட்டு, வீடுகள் அமைப்பதற்கென 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பகுதிக் கொடுப்பனவுகளாக வழங்கப்படவுள்ளது.

இதேபோன்று எதிர்வரும் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி இரண்டாவது சேவைப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, அதில் 150 குடும்பங்கள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

தெரிவு செய்த குடும்பங்களுக்கு அரை ஏக்கர் காணி வழங்கப்பட்டு, வீடு அமைப்பதற்காக 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா பகுதிக் கொடுப்பனவுகளாகவும் வழங்கப்படவுள்ளது.

### நெற்செய்கை பாதிப்பு

மன்னார் -ஆண்டான்குளம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள நெற்செய்கை, தற்போது பெய்து வரும் மழை காரணமாக கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிர்ச்செய்கை ஆண்டான்குளம் விதைகள் உற்பத்தியாளர் சங்கத்தால், விதை நெல்லுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு முல்லைத்தீவில் சேவை நலன் பாராட்டு

முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்களில் பிரதேச அஞ்சல் அத்தியட்சகராகக் கடமையாற்றி, அண்மையில் யாழ்ப்பாணம் அஞ்சல் திணைக்களப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தராகப் பதவி உயர்வுபெற்றுச் சென்ற வீ.குமரகுருவின் சேவைநலன் பாராட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அஞ்சல் அதிபர் கி.சிதம்பரநாதன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

விழாவின் வரவேற்புரையை முள்ளியவளை அஞ்சல் அதிபர் ஆர்.கங்காதரன் நிகழ்த்தினார்.

ஒட்டுசுட்டான் அஞ்சல் அதிபர் த.சிவபாதசுந்தரம், கொக்கிளாய் உப அஞ்சல் அதிபர் நா.அரவிந்தன், ஓய்வுபெற்ற குமுழமுனை உப அஞ்சல் அதிபர் ந.இரத்தினராசா, தபால் தரம் பிரிக்கும் உத்தியோகத்தர் சூ.மனோகரராசா, முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா, முல்லைத்தீவு மக்கள் வங்கி முகாமையாளர் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

முல்லைத்தீவு அஞ்சல் அலுவலக மூத்த அஞ்சலர் சோ.சண்முகநாதன் பரிசில் வழங்கிக் கௌரவித்தமையைத் தொடர்ந்து, விழா நாயகன் பதிலுரையாற்றினார்.

முல்லைத்தீவு உதவி அஞ்சல் அதிபர் வீ.வீ.இராசேந்திரம் நன்றியுரையாற்றினார்.

இந்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அஞ்சல் அதிபர்கள், உதவி அஞ்சல் அதிபர்கள், உப அஞ்சல் அதிபர்கள், கோலவுடைப் பணியாளர்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வைச் சிறப்பித்தனர். (21)

### புனரமைப்புப்பணி இடைநிறுத்தம்

மன்னார் - கட்டுக்கரைக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் - தற்போது பெய்துவரும் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

இந்தக் குளத்தின் புனரமைப்புப் பணிகள் - ஆரம்பிக்கப்பட்ட நிலையில், முக்கிய வாய்க்கால் இன்னும் புனரமைக்கப்படாத நிலையிலுள்ளது.

இங்குள்ள மதகுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதி மக்கள் பிரயாணம் மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

# கிளிநொச்சி ~ அக்கராயன் பிரதேசத்தின் வர்த்தகசங்க நிர்வாகக் குழு தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்துக்கான வர்த்தக சங்கத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் தலைமையில் இடம்பெற்றது.

வர்த்தக சங்கத் தலைவரான ஜெயபாலனும், செயளாளராக பாஸ்கரனும், பொருளாளராக சிவநாதனும் தெரிவு செய்யப்பட்டதுடன், 9 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாகக்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்திய அக்கராயன் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் - வர்த்தக சங்கங்களின் நடைமுறை பற்றியும், மாவீரர் நாளின் போது இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவேண்டிய பணிகள் குறித்தும் கருத்துக்களை வழங்கினர்.

# அக்கராயன் முன்பள்ளி சிறார்களின் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு

கிளிநொச்சி அக்கராயன் பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் அபிவிருத்தி தொடர்பான செயலமர்வு நேற்று முன்தினம் ஸ்கந்தபுரம் இலக்கம் 1 பாடசாலையில் இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத் திட்டமிடல் அலுவலர் தலைமையில் இடம்பெற்று வரும் இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியைக் கிராம அலுவலர் சபாரத்தினம் ஏற்றி வைத்தார்.

கருத்துரைகளைப் பிரதேச ஆலய முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவானந்தன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தைச் சேர்ந்த நல்லையா, அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத் தலைவர் கிருஸ்ணபிள்ளை உட்படப் பலரும் நிகழ்த்தினர்.

# உடையார்கட்டு மகா வித்தியாலயத்தில் சமகால கருத்தரங்கு இடம்பெற்றது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு உடையார் கட்டு மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் சமகாலக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்தக் கருத்தரங்கு - புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அதிகாரி எஸ்.பரமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

கருத்தரங்கில் முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பெறுப்பாளர் செ.முகுந்தன், முல்லைத்தீவு மாவட்டக் கல்வி கழகப் பொறுப்பாளர் அரிகண்டன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

மற்றும் இந்தப் பாடசாலை ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கண்காட்சி நடைபெற்றது.

மாணவர்களின் தேடல்கள் மற்றும் புதிய ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாகவும் கண்காட்சி அமைந்திருந்தது.



அண்மையில் மன்னார் நகரில் இடம் பெற்ற அசம்பாவிதம் தொடர்பாக சுமுகமான தீர்வினை காணுமுகமாக நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை படத்தில் காணலாம்.

படம் - கலைரவி

# சாகித்திய விருது பெற்ற முருகானந்தன் கௌரவிப்பு



(கிளிநொச்சி)

இந்த வருடம் 'தரைமீன்கள்' சிறுகதைத் தொகுதிக்காக தேசிய சாகித்திய மண்டல விருதைப் பெற்ற டொக்டர் ச.முருகானந்தன் - கிளிநொச்சி யோகர் சுவாமிகள் திருவடி நிலைய முதியோர் தின விழாவில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கப்பட்டார்.

முதியோர் இல்ல மண்டபத்தில் திருவடிநிலையத் தலைவர் பொன் நித்தியானந்தம் தலைமையில் இடம்பெற்ற முதியோர் தின விழாவில், முதியவர்கள் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

முதியோர்கள் பற்றி மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரி மாணவி அனுசியா எழுதிய 'முதியோர் வாழ உதவுவோம்' என்ற நூலும் இவ்விழாவில் வெளியிடப்பட்டது.

வெளியீட்டுரையை கலியுகவரதனும், மதிப்பீட்டுரையை நிரஞ்சலனும் நிகழ்த்தினார்கள்.

முதற் பிரதியை போரூட் திட்ட வெளிக்கள அலுவலர் சாந்தலிங்கம் அரச அதிபரிடமிருந்து பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில், நாட்டுப்பற்றாளர்களான அமரர் முருகேசு கந்தசாமி, பொன்.விநாயகமூர்த்தி ஆகியோரும் நினைவு கூரப்பட்டனர்.

மாலையில் முதியோர்களதும், பாடசாலை மாணவர்களதும் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

### குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு

(மன்னார்)

மன்னார் விடத்தல்தீவு மக்கள் குடிநீரைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த காலங்களில், வாகனங்கள் மூலம் குடிநீர் போதியளவு நாளொன்றுக்கு இருதடவைகள் வழங்கப்பட்டு வந்தபோதும், தற்போது ஒரு தடவை மட்டுமே குடிநீர் வழங்கப்படுவதால், இந்தப் பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

### கராத்தே போட்டி

(கிளிநொச்சி)

தமிழீழ விளையாட்டுத் துறையால், தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களையும் உள்ளடக்கிய மேஜர் ஈழப்பிரியா நினைவான 3 ஆவது தேசிய கராத்தேப் போட்டி இந்த மாதம் 23, 24 ஆம் திகதிகளில் கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் அனைத்து மாவடடங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படட சிறந்த வீரர்கள் கலந்து கொள்ளும் தேசியப் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியின் பிரதம தீர்ப்பாளராக இலங்கையின் கராத்தே கலையின் தந்தையான சீர்கான் பொனி றொபேட் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

எனவே தமிழீழ தேசிய கராத்தே சங்கத்தால் அனுப்பி வைக்கப்பட்ட சுற்று நிருபத்தின்படி போட்டியாளர்களை தயார்படுத்திக் கொள்ளுமாறு, அனைத்து மாவட்ட கராத்தே சங்கத்தினரும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

### மயங்கி வீழ்ந்து ஒருவர் மரணம்

(கிளிநொச்சி)

இராமநாதபுரம் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஒருவர் திடீரென வீழ்ந்து மரணமானார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது -

கடந்த வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த இராமநாதபுரத்தைச் சேர்ந்த குமார் கருணாராஜா (வயது 54) என்பவர் இராமநாதபுரம் வயலூர் முருகன் கோவிலடியில் திடீரென வீழ்ந்து மரணமானார்.

இந்த நபர் மரடைப்புக் காரணமாக உயிரிழந்து இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது.

மேலதிக வைத்திய பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இவரது சடலம் ஒப்படைக்கப்பட்டது. (09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்று அதன்*
*குத்துஒக்க சீர்த்த இடத்து.*

திருக்குறள்

# நமது நோக்கு

## அதிகரிக்கும் சந்தேகங்கள்

அடுத்த ஆண்டில் பாதுகாப்புக்காக 5630 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதான செய்தி - அரசாங்கம் இன்னமும் போர் மனநிலையில் இருந்து மீளவில்லை என்பதையே காட்டுகின்றது.

கடந்த 2002 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கை நடைமுறைக்கு வந்த பின்னர் பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீடு குறைவடையும் என்றே எதிர்பார்க்கப்பட்டு வந்தது.

கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டில் நடந்த யுத்தத்தினால், பாதுகாப்புச் செலவுகளே வரவு செலவுத் திட்டத்தின் பெரும் பகுதி நிதி ஒதுக்கீடுகளைத் தின்று தீர்த்து வந்தன.

இந்த நிலை மாறும், போருக்கு ஒதுக்கீடு செய்து வந்த நிதியை கல்வி, அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஒதுக்கலாம் என்று அரசியல்வாதிகள் கூறி வந்த வாக்குறுதிகளெல்லாம் காற்றில் பறக்கத் தொடங்கி விட்டன.

இப்போது சமாதானப் பேச்சுக்கள் நடக்கிறதோ இல்லையோ - சண்டைக்கான தயாரிப்புக்களும் பாதுகாப்புக்கான செலவுகளும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இந்த ஆண்டில் பாதுகாப்புக்காக 5208 கோடி ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியிருந்தது. அடுத்த ஆண்டில் இந்தத் தொகை 422 கோடி ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. இது சுமார் எட்டுச் சதவீத அதிகரிப்பாகும்.

போருக்கான எந்த ஆயத்தமும் இல்லாத சூழலில் - யுத்தநிறுத்த காலத்தில் அரசாங்கம் ஏன் இந்தளவு தொகையை பாதுகாப்புக்காக ஒதுக்கத் திட்டமிட்டுள்ளது என்ற கேள்வி இங்கு எழுந்துள்ளது.

போர்க் காலத்தில் கோடி கோடியாகக் கொட்டி ஆயுதங்களை வாங்கிக் குவித்த அரசாங்கம் - இப்போது சமாதான சூழலில் ஆயுதங்களை வாங்கிக் குவிப்பதற்காகவா இந்தளவு நிதியை ஒதுக்கத் திட்டமிட்டிருக்கிறது?

பாதுகாப்புக்காக ஒதுக்கப்படும் நிதி தனியே போர்த்தளபாடக் கொள்வனவுக்கு மட்டும் பயன்படுத்தப்படவில்லை. கடந்த காலத்தில் ஆயுதங்களுக்காக பெற்ற கடனை அடைக்க வேண்டும். படையினருக்கான சம்பளங்கள் அவர்களுக்கான செலவீனங்கள் நிறையவே இருக் கின்றன என்று கடந்த காலத்தில் அரசாங்கங்கள் நியாயம் கூறியிருந்தன.

ஆனால் இந்த வருடம் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் திடீரென பாது காப்புக்கு 8 வீதம் அதிகளவு நிதியை ஏன் ஒதுக்க வேண்டும்?

கடந்த இரண்டு வருடகாலமாக சமாதான சூழல் நிலவுகின்றதால் - போர்த்தளபாட இழப்புக்கள் அரசுக்கு ஏற்படவில்லையே. இதற்காகச் செலவிட வேண்டிய பணம் அரசாங்கத்துக்கு மீதியாக கிடைத்திருக்க வேண்டுமல்லவா?

ஆனால், ஒவ்வொரு வருடமும் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதி அதிகரித்துச் செல்வதும் - தொடர்ந்து போர்த்தளபாடங்களை அரசாங்கம் வாங்கிக் குவித்துவருவதும் இன்னொரு போருக்கான ஆயத்தங்களாகவே தெரிகிறது.


நாட்டில் - விலைவாசி உயர்வு ஒருபுறம் வேலையின்மை இன்னொரு புறம் என்று பொருளாதார நிலை மோசமடைந்து செல்கிறது.

கல்வி, சுகாதாரம் என்று அடிப்படைக் கட்டு மானங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்ந்தும் பின்தள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் - பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு மட்டும் மீண்டும் வரவு செலவுத்திட்டத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் அரசாங்கத்தின் பாதுகாப்பு நிதி ஒதுக்கீடு வரவு செலவுத்தி திட்டத்தின் மொத்த அரச செலவின் எட்டில் ஒரு பகுதியாகும்.

இது, சமாதான முயற்சிகள் என்ற பெயரில் காலத்தைக் கடத்திவரும் அரசாங்கம் - போர்த் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றதென்ற உண்மையை மீண்டும் உணர்த்தி நிற்கிறது.

# நாடும் நடப்பும்




செய்தி:- சபாநாயகருக்கு எதிராக நம்பிக் கையில்லலாப் பிரேரணை கொண்டுவரத்திட்டம்

## சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நவம்பர் மாதம் நிரந்தர நியம்னம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் 24 ஆயிரம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றுகின்றனர். அதில் 3 ஆயிரம் பேர் மட்டுமே நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். அதனால் ஏனைய சமுர்த்தி உத்தியோகத்தர்களையும், எதிர்வரும் நவம்பர் 12 ஆம் திகதிக்குள் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர்கள் சங்கத்தின் ஏழாவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் கொழும்பு விகாரமாதேவி திறந்தவெளி அரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் - 1995 ஆம் ஆண்டில் எமது அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டு, வளர்க்கப்பட்ட சமுர்த்தித திட்டம் ஐக்கிய தேசிய கட்சி ஆட்சியில் அமைச்சராக இருந்த எஸ்.பி.திஸநாயக்கவினால் அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டது. எனினும் எமது அரசாங்கம் அதற்கு மீண்டும் உயிர் கொடுத்து வந்துள்ளது.

ஏனைய அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் போலவே இலங்கையும் வேலைவாய்ப்பு பிரச்சினைகளை எதிர் கொள்கின்றது. இளைஞர்கள் பலர் படித்துவிட்டு வேலையின்றி இருக்கிறார்கள்.

இலங்கையின் எதிர்காலத்தை தீர்மானிக்கப்போகும் இளைஞர்கள் இவ்வாறு பரிதவிப்பதால், அவர்களுக்கு சிறந்த எதிர்காலத்தை உருவாக்கும்வகையில் வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானித்துள்ளோம்.

கிராமிய மக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் பலவற்றையும் நாட்டின் பல பகுதிகளிலும் முன்னெடுக்கவுள்ளோம். இதனோடு குடும்ப அபிவிருத்தி, விவசாய மேம்பாட்டுத் திட்டங்களையும் முன்னெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.

சமுர்த்தி நிவாரணத்தை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வாகனங்களின்றி போக்குவரத்து நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கின்றனர். அதனால் அவர்களுக்கு குறைந்த விலைக்கு இலகுமுறையில் வாகனங்களை மூன்று மாதங்களுக்குள் வழங்க உத்தேசித்துள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

## ஒப்பந்தகாரர்கள் நியமனம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் நிர்மாண வேலைகளைச் செய்வதற்கு ஒப்பந்தகாரர்களை நியமிக்கும் நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடல் யாழ் பல நோக்குகூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நாளை காலை 10 மணியளவில் இடம் பெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச சபை செயலர்களையும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும் தவறாது சமுகம் தருமாறு தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் மூலம் யாழ் மாவட்ட நிர்மாணப் பணிகளுக்கு சீரான ஒப்பந்தகாரர்களை ஒழுங்குபடுத்தி அதன் மூலம் நிர்மாணப்பணிகளை செவ்வனே செய்து கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போக்குவரத்துப் பொலிஸாரின் வீதிச் சோதனைகள் தீவிரம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேசத்தில் போக்குவரத்துப் பொலிஸாரினால் வீதியில் செல்கின்ற வாகனங்கள் தற்போது அடிக்கடி சோதனையிடப்பட்டு வருகின்றன.

வாகனங்கள் செலுத்துவோர் வைத்திருக்கவேண்டிய ஆவணங்களைச் சோதனை செய்வதற்காகவே தற்போது பரவலாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி உரிய ஆவணங்கள் இல்லாத வாகனங்கள் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. தற்போது இந்த நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதோடு இரவில் விளக்குகள் இல்லாமல்வரும் சைக்கிள்களையும் மறித்துத் தண்டப்பணம் அறவிடப்படுவதாக மக்கள் தெரிவித்தனர்.

சைக்கிள்களுக்கு முன் விளக்குகள், இலக்கத் தகடுகள் பொருத்தவேண்டியது கட்டாயம் எனவும், இது சம்பந்தமாக முன்னரே தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே இனிவரும் காலங்களில் மோட்டார் வாகனங்களைப் போன்று, சைக்கிள்களுக்கான கட்டுப்பாடுகளையும் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்போவதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

## பாதுகாப்பற்ற நிலையில் மின்பிறப்பாக்கி அறை

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் ஆலயத்துக்கு அருகிலுள்ள மின் பிறப்பாக்கி அறையினுள் பாடசாலைச் சிறுவர்கள் சென்றுவருவதாகவும், இதனால் அவர்கள ஆபத்தை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும் என அந்தப் பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்த இடத்திலுள்ள மின்சாரசபைக்குச் சொந்தமான ட்ரான்ஸ்போமர் அமைந்துள்ள இடத்தில் ஆரம்பப் பாடசாலைகள் விடும் நேரத்தில் சிறுவர்கள் அதிகமாகக் கூடுவதாகவும் இந்த மின்சார அறைக்கதவுகள் எந்த வேளையிலும் திறந்தே காணப்படுவதால் அவர்கள் அதற்குள் சென்று விளையாடுவதும் அந்தப் பகுதி மக்களால் அவதானிக்கப்பட்டுள்ளது.

இது இந்தச் சிறுவர்களுக்கு ஆபத்தாகிவிடும் எனவும் இது விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் இதில் அக்கறை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரியுள்ளனர்.

மைத்திரி பால மீதான குற்றச்சாட்டு

## அமைச்சர் அனுர குமாரவிடம் விளக்கம் கோரினார் ஜனாதிபதி

(கொழும்பு)

அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக ஜே.வி.பி அமைச்சர் அனுர குமார திஸநாயக்க தெரிவித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பில் விளக்கமளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரி பால சிறிசேன மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரனை நடத்துவதற்கு குழு ஒன்றை நியமித்துள்ளதாகவும் ஜனாதிபதி சந்திரிகா அமைச்சர் அனுர குமார திஸநாயக்காவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

அமைச்சர் மைத்திரிபால சிறினேவின் சகோதரர் ஒருவரும், பிரதி அமைச்சர் ஒருவருமே தற்போது நாட்டில் அரிசி விலையினை நிர்ணயம் செய்வதாக அமைச்சர் அனுர குமார திஸநாயக்க கடந்த 10 ஆம் திகதி கருத்து வெளியிட்டுள்ளார்.

அமைச்சரின் இந்தக் கருத்துக் குறித்து மைத்திரி பால சிறிசேன - ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதை அடுத்தே ஜனாதிபதி அமைச்சர் அனுரகுமார திஸநாயக்க விடம் விளக்கம் கோரியிருப்பதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ் வார பலன் 22.10.2004 முதல் 28.10.2004 வரை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | |
| யுரே | 22 இரவு 12.39 கும். - சந்.<br>23 பி.இ. 5.27 கன். - சுக். | | சனி |
| சந்.<br>நெப் | 24 பி.இ. 5.29 மீன. - சந்.<br>27 பகல் 12.15 மே. - சந். | | சுக் |
| | | சூ. புத.<br>கேது | குரு<br>செவ். |



## மேடம்

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*

இந்த இராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் இடையிடையே சிறுசச்சரவுகள் தோன்றும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். நினைத்த கருமங்கள் கைகூடுவதில் தாமதம் காட்டும். பணவரவு இருப்பினும் பற்றாக்குறை இருந்து கொண்டிருக்கும். தேகசுகத்தைப் பேணிக்கொள்வது அவசியம். பெரியோர்களால் உதவியுண்டு. திருமணப் பேச்சுக்கள் தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்குப் புதிய திட்டங்களால் நன்மைகள் ஏற்படும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிடையாது. வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நன்றாக இருக்கும். முன்னேற்றம் குறைவாகவே காட்டும். மாணவர்கள் முயற்சிக்கேற்ப முன்னேற்றம் காண்பர்.

## இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்)*



இடபராசிக்காரருக்கு குரு பார்வை இருப்பதால் குடும்பத்தில் நன்மையான பலன்களே நடக்கும். குடும்ப அங்கத்தவர்களிடையே புரிந்துணர்வு காணப்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சியான செய்திகள் கிடைக்கும். பொருளாதாரம் பாதிப்பைத் தராது. வீட்டில் சுப நிகழ்வுகள் நடக்கும். தேகாரோக்கியம் சீராக இருக்கும். மண வாழ்க்கையை எதிர்நோக்குவோருக்கு விரைவில் கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் முன்னேற்றம் காணப்படும். உயரதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். அலங்காரப் பொருட்கள் விற்பனை செய்வோர் கூடிய லாபம் பெறுவர். பணமும் சேரும். மாணவர்கள் முன்னேற்றமும் தேர்ச்சியும் பெறுவர்.



## மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)*

மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு நன்மை, தீமை கலந்த பலன்களைக் காட் டும். குடும்பத்தில் இடையிடையே சிறு பிரச்சினைகள் தோன்றி மறையும். பொருள் வரவு இருப்பினும் வீண் செலவுகள் அதிகமாகும். எல்லாவற்றிலும் முன்னெச்சரிக்கை தேவை. வாக்கு வாதங்களைக் குறைத்துக் கொள்ளவும். வைத்தியச் செலவுகளும் தலைதூக்கும். திருமணப் பேச்சுக்கள் இழுபறியைக் கொடுக்கும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் அவநம்பிக்கைக்கு ஆளாக வேண்டிவரலாம். சுயதொழில் புரிவோரின் ஒத்துழைப்புக் கிடைக்காமற் போகலாம். வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடந்தாலும் - மேசை நிறையாது. கடன் வியாபாரத்தைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

## கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசிக்காரருக்குக் குடும்பத்தில் பல சிரமங்கள் மாறி, மாறித் தோன்றும். புரிந்துணர்வு குடும்பத்தினரிடையே இருக்காது. பிடிவாதத் தன்மைகளால் வாக்கு வாதங்கள் தோன்றும். பிரயாணங்களின்போது அலைச்சல், தடை, தாமதங்கள் காட்டும். வரவுக்கு மேற்பட்ட செலவு தவிர்க்கமுடியாமல் இருக்கும். திருமணப் பேச்சுக்கள் கைகூடாது. உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகம். மேலதிகாரிகளின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடக்கவும். அலுவலகத்தில் சிறு பிரச்சினைகள் உருவாகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நட்டத்திலேயே நடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. மாணவர்கள் நண்பர்களுடன் வாக்கு வாதப்படுவார்கள்.



## சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*

சிங்க ராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப அங்கத்தவர்களிடையே ஒற்றுமை வலுப்படும். உற்றார், உறவினர்களுக்கிடையில் நல்லுறவு கூடுதலாக இருக்கும். பொருள்வரவு அதிகரிக்கும். நண்பர்கள், அயலவர்கள் உதவி செய்வார்கள். உடல் நலம் திருப்தியாக இருக்கும். தொடங்கும் கருமங்கள் எளிதில் நிறைவுபெறும். திருமணப் பேச்சுக்கள் சற்றுத் தாமதத்தின்பின் நிறைவுபெறும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர், பொதுமக்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். சிலருக்குத் தொழில் சம்பந்தமான பிரயாணம் ஏற்படலாம். வர்த்தகர்களுக்குப் பழைய முதலீடுகள் விற்பனையாகும். வியாபாரம் சிறப்படையும். புதிய வாடிக்கையாளர்கள் சேருவர். மாணவர்களுக்குக் கல்வி விருத்தியுண்டு.



## கன்னி

*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னி ராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் கவலைகள், பிணக்குகள் அதிகரிக்கும். மனைவி, மக்களால் சிரமங்களும், செலவுகளும் தோன்றும். தேகசுகம் இடையிடையே பாதிப்படையும். பணவருவாய் இருப்பினும் தேவைக்குப் போதாமலே இருக்கும். பிரயாணங்களிலும் பிரயாசை அதிகமாகும். திருமணப் பேச்சுக்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு சக ஊழியர்களின் ஒத்துழைப்புக் குறையும். வேலைப் பொறுப்புக்கள் அதிகமாகும். ஊதிய உயர்வு பின்தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்தநிலை காட்டும். வங்கி உதவிகள் உரிய நேரத்தில் கிடையாது. மாணவர்களுக்கு ஏமாற்றம் அதிகமாகும். சுயமுயற்சி வெற்றிதரும்.



## துலாம்

*(சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள் சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் )*

துலா ராசியில் பிறந்தவர்களுக்குக் குடும்பத்தில் நல்லுறவு வளரும். வாழ்க்கைத் தரம் உயரும். புத்திரர்களால் உதவிகள் கிடைக்கும். வீட்டில் சுபநிகழ்வுகள் ஏற்படலாம். பண வரவு பிரச்சினை தராது. திருமணப் பேச்சுக்கள் தாமதமடையும். தேகசுகம் முன்னேற்றமடையும். உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க ஆதரவு பெருகும். வர்த்தகர்களுக்கு தொழில் வளர்ச்சி பெறும். வங்கி உதவி, வாடிக்கையாளர்களின் உதவியுண்டு. தொழிலாளர்கள் ஒத்துழைப்பு வழங்குவர். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமடைவர். சிலருக்குக் கல்வி சம்பந்தமான வெளிநாட்டுப் பயணம் கிட்டும்.



## விருச்சிகம்

*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக அமையும். எண்ணியவாறு கருமங்கள் கைகூடும். பண வருவாய் சிறப்பாக இருக்கும். தேக சுகம் பாதிப்படையாது. வீட்டில் சுபகருமங்கள் விருந்து பசாரங்கள் நடக்கும். நண்பர்கள், உறவினர்களின் வருகை அதிகரிக்கும். பிரயாணங்களில் பலவித அனுகூலங்கள் கிட்டும். திருமணத்தை எதிர்நோக்குவோருக்குக் கருமம் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நற்பெயர் கிட்டும்.

வர்த்தகர்களுக்கு வியாபாரம் 'ஓகோ' என்று நடக்கும். பழைய மூதலீடுகள் விற்பனையாகிப் பணம் சேரும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகமாகும் உயர் கல்வி கற்க வாய்ப்புக்கள் கிட்டும்.



## தனுசு

*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் அமைதி குன்றும். இடையிடையே சிறு பூசல்கள் தோன்றும். கருமங்கள் பலவும் தடைதாமதத்தின் பின்பே நிறைவேறும். பிரயாணங்களால் வீண் விரயம் ஏற்படும். பொதுக்கருமங்களில் ஈடுபட்டோர் பலரிடமிருந்தும் குறைகேட்க நேரும். திருமணப்பேச்சுக்கள் இழுபறி நலையை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பழு அதிகரிக்கும். சக ஒத்துழைப்புகள் குறையும். ஊதிய உயர்வு தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரத்தில் மந்த நிலை காட்டும். பண உதவிகள் தாமதமடையும். மாணவர்கள் உற்சாகத்துடனும் உறுதியுடனும் காணப்படுவர்.



## மகரம்

*(உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள் திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்)*

மகர ராசியில் ஜனனமானவர்களுக்குக் குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வீண் செலவுகள் அதிகமாகும். வெளிநாட்டிலிருந்து பணவருவாய் கிடைக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகமாக இருக்கும். குரு பார்வை இருப்பதால் பணவருவாய் குறையாது. திருமணப்பேச்சுக்கள் விரைவில் நல்ல பலனைத் தரும். உத்தியோகத்தர் சிறப்பாகப் பணியாற்றி பலரின் பாராட்டைப் பெறுவர். சிலருக்கு பதவி உயர்வு கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு வர்த்தகம் சுறுசுறுப்பாக நடக்கும். புதிய முதலீடுகளைச் செய்வதற்கு உகந்த காலம். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். கலைத்துறை மாணவர்கள் முன்னணியில் திகழ்வர்.



## கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள )*

கும்பராசியினருக்கு குடும்ப உறவுகள் சீராக இருக்கும். அவ்வப்போது சிறு பூசல்கள் தோன்றினாலும் பாரதூரமாக இருக்காது. கருமங்கள் தடை தாமதத்தின் மேல் கைகூடும். தேக சுகம் பாதிப்படைய நேரும். வைத்தியச் செலவு தவிர்க்கமுடியாமலிருக்கும். பிரயாணங்களில் அலைச்சல் மிகும். திருமணப்பேச்சுக்கள் தாமதம் காட்டும். உத்தியோகத்தர்களுக்கு வேலை மாற்றங்களால் கடுமையாக வேலை செய்ய வேண்டியிருக்கும். வியாபாரத்தில் மந்த நிலை ஏற்படும். வாடிக்கையாளர்கள் விலகிப் போக நேரிடும். மாணவர்களுக்கு பரீட்சையில் சித்தி உண்டு. உயர் கல்வி தடைப்படும்.



## மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*

மீனராசியினருக்கு குடும்ப உறவுகளில் ஒற்றுமை வலுப்படும். கணவன் மனைவி அந்நியோன்னியம் சிறப்பாக இருக்கும். புத்திரர்களால் நன்மையான பலன்கள் உண்டாகும். வீட்டில் விருந்து பசாரங்கள் நடக்கும். எடுத்த கருமங்கள் விரைவில் கைகூடும். பணவருவாய் அதிகரிக்கும். திருமணப் பேச்சுக்கள் மகிழ்ச்சியான முடிவைத் தரும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் மதிப்பு, மரியாதை அதிரிக்கும். சகாக்களின் உதவி உண்டு. வர்த்தகர்களுக்கு [illegible] கூடிய லாபம் பெறுவர். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் மிகும். தேர்ச்சி உண்டு. சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கைகூடும்.

# நவராத்திரி காலத்தில் தனியிடம் வகிக்கும் கலைமகள் வழிபாடு



நவராத்திரி என்றால் ஒன்பது இரவுகள் திருவருட் சக்தியும் உலக மாதாவுமாகிய உமாதேவியை விசேடமாக வழிபட்டு நாம் அருள் பெறுவதற்குரிய புண்ணிய காலம் நவராத்திரியாகும்.

இந்தக் காலங்களில் அம்பிகையை - முதல் மூன்று இரவுகளில் துர்க்கையாகவும், அடுத்த மூன்று இரவுகளில் மகாலட்சுமியாகவும், இறுதி மூன்று இரவுகளில் சரஸ்வதியாகவும் பாவனை செய்து வழிபடுவது சைவர்களது பாரம்பரியமான மரபு.

உலகமெல்லாம் ஆக்கி, அளித்து, அழிக்கும் பேராற்றலைச் சக்தி என்று வழிபடுவது, காலந்தோறும் தொன்றுதொட்டு இருந்து வரும் மரபு. சக்தியின் வகைகள் பல. பராசக்தியே யாவருக்கும் மேலான தெய்வம் என்று வழிபடும் சமயத்தைச் சாக்தம் என்று கூறுவர். ஸ்ரீசங்கராச்சாரியார் முறைப்படுத்தி அமைத்த ஆறு சமயங்களில் சாக்தமும் ஒன்று.

சக்தி பேதங்கள் பற்பல. பராசக்தி, ஆதிசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி, இச்சாசக்தி என்று பிரிப்பது ஒருவகை. மூன்று மூர்த்திகளிடத்தும் இருந்து - அவர்கள் இயற்றும் தொழிலுக்கு உறுதுணையாக உள்ள சக்திகள் - கலைமகள், அலைமகள், மலைமகள் என்பார்கள். நாமகள் எல்லாச் சமயத்தினராலும் பூஜிக்கப்படுகிறவள். இந்த நாட்டில் விநாயகர் வழிபாடும், கலைமகள் வழிபாடும் - எல்லாச் சமயத்தினராலும் மேற்கொள்ளப்படுபவை. விநாயகரை வழிபடாதவர்கள் கூடச் சரஸ்வதி பூஜையை மறப்பதில்லை.

இளம் பராயத்தில் கல்வி கற்பிக்கப்படும் பொழுதே 'புத்தகத்துள்ளுறை மாதா' வாகிய கலைமகளை வணங்கித் தொடங்குதல் இந்த நாட்டில் வழக்கம். வைணவர்களும் சைவர்களும்கூட கலைமகளை வணங்குகிறார்கள்.

பழுத்த சைவரும் துறவியுமான குமரகுருபர சுவாமிகள் கலைமகளை 'உன்போற் கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே' என்று பாடியிருக்கிறார்.

தமிழ்ப் புலவர்களில் ஈடும் எடுப்புமில்லாத கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பர் நாமகளின் பக்தர். அவர் பாடிய சரஸ்வதி அந்தாதியே இதற்குச் சான்று.

ஒட்டக்கூத்தர், கூத்தனூரில் கலைமகள் திருக்கோயிலை நிறுவினார். அந்த ஊருக்கு அவர் பெயராலே பெயர் அமைந்தது.

அரிசிலாற்றங்கரையில் அமைந்த திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அந்தப் பெருமாட்டியை 'ஆற்றங்கரைச் சொற்கிழத்தி வாழியே' என்று தக்கயாகப் பரணியில் ஒட்டக்கூத்தர் வாழ்த்துகிறார். அந்தக் கோயிலில் இருந்து அந்த நூலைப் பாடினார் என்று ஒரு வரலாறு உண்டு.

காளமேகப் புலவரும் கலைமகளின் அருள்பெற்று மன்னனோடு சரி ஆசனத்தில் வீற்றிருந்தவர். தமிழ்ச் சங்கத்தில் இருந்த சங்கப் பலகையைச் சரஸ்வதி பீடம் என்றும், நாற்பத்தொன்பது புலவர்களும் கலைமகளின் அவதாரம் என்றும் திருவிளையாடற் புராணம் கூறுகிறது. ஒளவைப் பாட்டியைக் கலைமகள் திருவவதாரமாகக் சொல்வதுண்டு.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறளுக்குச் சிறப்புப் பாயிரமாக உள்ள பல பாடல்கள் அமைந்த 'திருவள்ளுவமாலை' என்ற நூல் ஒன்று இருக்கிறது. அதில் கலைமகளே பாடியதாக ஒரு பாடல் வருகிறது.

'நான் முதலில் நான்முகன் நாவில் இருந்து நான்முறைகளைப் பாடினேன். பிறகு வியாசருடைய நாவில் அமர்ந்து பாரதத்தைப் பாடினேன். இப்போது திருவள்ளுவர் வாக்கில் இருந்து திருக்குறளை அருளினேன்' என்ற கருத்தை அத்தேவி பாடிய வெண்பாவில் காண்கிறோம்.

ஆகமங்களிலும், சாஸ்திரங்களிலும் ஆங்காங்கே வழங்கும் கதைகளிலும் நாமகளைப் பற்றிய செய்திகள் கணக்கில்லாமல் இருக்கின்றன. இத்தகு சிறப்புக்களைச் சேர்க்கின்ற நவராத்திரி விழாவில் கலைமகள் வழிபாடு தனித்துவமானதோர் இடத்தை வகிக்கின்றது. அந்தக் கல்வித் தெய்வமான கலைமாதின் அருள் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

# வீரப்பனின் ரகசிய டயரியும் பொலிஸாரால் மீட்கப்பட்டது!



(சென்னை)

வீரப்பன் சுட்டுக்கொல்லப்பட்ட அம்புலன்ஸ் வாகனத்தில் இருந்து வீரப்பனின் ரகசிய டயறியையும், கடிதங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். வீரப்பன் இருந்த அம்புலன்ஸ் வாகனத்தை அதிரடிப்படைப் பொலிஸார் சோதனை செய்தபோது ஏராளமான ஆவணங்கள் கிடைத்தன. வாகனத்திலிருந்து ரொக்கப்பணமும் நவீனரக துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்ட தகவல் மட்டும் முதலில் தெரியவந்தது.

இப்போது அந்த வாகனத்தில் கைப்பற்றப்பட்ட முக்கிய ஆவணங்களில் வீரப்பன் கைப்பட எழுதிய ரகசிய டயறியும் ஒன்று என்ற தகவல் கிடைத்துள்ளது. அதேபோல ஒரு சட்டத்தரணியின் விசிட்டிங்காட், மற்றும் பத்திரிகை ஆசிரியரின் விசிட்டிங் காட் ஆகியவையும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் வீரப்பனுக்கு அவருடைய கூட்டாளிகள் மூலம் பிறர் கொடுத்து அனுப்பிய கடிதங்களையும் பொலிஸார் முக்கய ஆதாரங்களாகக் கைப்பற்றி இருக்கிறார்கள். மாந்திரீக தாயத்துகளும், மாந்திரீக புத்தகங்களும் அம்புலன்ஸ் வாகனத்தில் இருந்து எடுக்கப்பட்டன. வீரப்பனின் ரகசிய டயறியில் பல திடுக்கிடும் தகவல்கள் உள்ளன. யார் யாருடன் எல்லாம் வீரப்பனுக்குத் தொடர்பு உண்டு என்ற விபரம் அந்த டயறியில் இருக்கிறது.

யாா யாரிடம் இருந்து பணம் வாங்கிய விபரம், யார் யாருக்கெல்லாம் பணம் கொடுக்கப்பட்டது என்பதுபோன்ற விபரங்களையும் வீரப்பன் அந்த டயறியில் குறிப்பிட்டுள்ளார். வீரப்பனுக்கு ஜோதிடத்தில் நம்பிக்கை இருந்ததும் தெரியவந்துள்ளது. கைப்பற்றப்பட்ட ஒருகடிதத்தில் மட்டும் வீரப்பனின் சாதகத்தைக் குறித்து கொடுத்த தகவல்கள் உள்ளன. அந்தக கடிதத்தில் 'வீரப்பன் மிகவும் கவனமாக இருக்கவேண்டும், யாரையும் நம்பக்கூடாது, அவரது நேரம சரியில்லை' என்றும் எழுதப்பட்டுள்ளது.

அதேபோல் வீரப்பனின் மனைவி மற்றும் 2 மகள்களின் போட்டோக்களையும் வாகனத்தில் வரும்போது வீரப்பன் கொண்டுவந்திருக்கிறார். அந்தப் போட்டோக்களும் பொலிஸாரிடம் சிக்கியுள்ளன. கைப்பற்றப்பட்ட ரகசிய டயறி, கடிதங்களைக்கொண்டு பொலிஸார் விசாரணை நடத்த முடிவுசெய்துளளனர். வீரப்பனிடம் பணம் வாங்கியவர்கள், பணம் கொடுத்தவர்கள் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்படும் என்று தெரிகிறது.

# சீன நிலக்கரிச் சுரங்க விபத்தில் 56 தொழிலாளர்கள் உயிரிழப்பு!



(பீஜிங்)

சனாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட வாயு வெடிவிபத்தில் 56 பேர் கொல்லப்பட்டதுடன், 92 பேர் காணாமற்போயுள்ளனர்.

சீனாவின் ஹெனன் மாநிலத்தின் சின்மி நகரத்தில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்திலேயே நேற்றுமுன்தினம் இந்த வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இந்தச் சுரங்கத்தில் 400 தொழிலாளர்கள் பணியாற்றிக்கொண்டிருந்ததாகவும், வெடிவிபத்து இடம்பெற்றவேளை 200 இற்கும் மேற்பட்டவர்கள் தப்பியோடிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இறந்தவர்களது எண்ணிக்கையும், காணாமற்போனவர்களது எணணிக்கையும் அதிகரிக்கலாம என மீட்புப் பணியாளர்கள் அசசம் வெளியிட்டுள்ளனர்.

எனினும் பலா் இந்தச் சுரங்கத்தினுள் உயிருடனோ, மயக்கமடைந்த நிலையிலோ காணப்படலாம் என நகர நிர்வாக அதிகாரி தெரிவித்தார். விபத்து ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் எவரும் உயிர்வாழ்வதற்கான சாத்தியக்கூறுகள் இல்லையென அதிகாரிகள் தெரிவித்ததாக ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் தெரிவித்தது.

அண்மைய காலங்களில் சீனாவில் ஏற்பட்ட மோசமான நிலக்கரிச் சுரங்க விபத்துக்களில் இதுவும் ஒன்று எனத் தெரிவிக்கப்படுகிறது. வருடந்தோறும் சீனாவில் ஏற்படும் நிலக்கரிச் சுரங்க விபத்துக்களால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பலியாகிவருகின்றனர். இந்த வருடத்தின் கடந்த ஒன்பது மாதங்களில் மட்டும் 4 ஆயிரத்து 153 சுரங்கத் தொழிலாளர்கள் விபத்துக்கள் காரணமாக இறந்துள்ளனர்.

பெரும்பாலான சுரங்கங்களில் பாதுகாப்பற்ற முறையில் சட்ட விரோதமாக நிலக்கரி அகழப்பட்டு வருவதாலும், நிலக்கரிக்கு உலக சந்தையில் ஏற்பட்டுள்ள கேள்வி காரணமாக விபத்துக்களால் மூடப்பட்ட நிலக்கரிச் சுரங்கங்களை உடனடியாக மீண்டும் திறந்து நிலக்கரி அகழப்படுவதனாலுமே இந்த விபத்துக்கள் ஏற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஜப்பானில் புயல், வெள்ளப்பெருக்கில் பெருமளவு உயிர், உடமைச் சேதம்!

ஜப்பானின் தென்பகுதியில் நேற்று ஏற்பட்ட கடும்புயல் மற்றும் வெள்ளப்பெருக்குக் காரணமாக 54 பேர் கொல்லப்பட்டதுடன், 29 பேர் காணாமற்போயுள்ளனர். அத்துடன் 200 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பத்தாண்டுகளில் ஜப்பானில் ஏற்பட்ட பாரிய புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களில் இதுவும் ஒன்று என ஜப்பானிய பொதுத் தொடர்பு சாதனம் ஒன்று தெரிவித்தது. ஜப்பானின் தென்பகுதி நகரத்தில் இந்தப் புயற்காற்று மணிக்கு 229 கிலோமீற்றர் வேகத்தில் வீசியுள்ளது. இதனால் பல இடங்களில் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன.

இறந்த மற்றும் காணாமற்போனவர்களது எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். புயற்காற்றுக் கர்ரணமாக பாரிய மரங்கள் வேருடன் சாய்ந்து விழுந்துள்ளதையும், வாகனங்கள் தெருவோரங்களில் வீசப்பட்டுக் காணப்படுவதையும் தொலைக்காட்சி ஒன்று காண்பித்தது.

அத்துடன் வெள்ளப்பெருக்குக் காரணமாக சிறிய குடிசைகள் மற்றும் வாகனங்களும் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. உல்லாசப் பயணிகள் உட்பட பெரும்பாலானோர் வெள்ளம் காரணமாக வீட்டுக் கூரைகள் மற்றும் பஸ்தரிப்பு நிலையங்களின் கூரைகளிலேயே பாதுகாப்புக்காக இருந்துள்ளனர்.



இந்த அனர்த்தம் காரணமாக விமான சேவைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. புயற்காற்றினால் தாக்குண்ட பிரதேசங்களில் - மின்சாரம், தொலைத் தொடர்பு வசதிகள் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள் உட்பட வர்த்தக நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுள்ளன. வெள்ளப்பெருக்கு மற்றும் புயற்காற்றுக் காரணமாக 18 ஆயிரம் பேர் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். அத்துடன் பல இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் மழைபெய்துவருவதுடன், புயற்காற்றும் வீசிவருவதால் ஜப்பானின் தென்பகுதி நகரங்களான கையூசு, சிஹோகு ஆகிய பகுதிகளில் கடற்கொந்தளிப்புக் காரணமாக 9 மீற்றர் உயரத்திற்கு கடலலைகள் உயருமெனவும், பாதுகாப்புக்கருதி வேறு இடங்களிற்குச் செல்லுமாறும் மக்களுக்கு வானிலை அவதானிப்பு நிலையம் அறிவுறுத்தியுள்ளது.




# ஆப்கான் ஜனாதிபதி தேர்தல் ஹமீட் ஹர்சாய் முன்னிலையில்



ஆப்கானின் இடைக்கால ஜனாதிபதி ஹமீட் ஹர்சாய்-ஆப்கான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அங்கு நடைபெற்ற தேர்தலின் பின்னர் தற்போது அரைவாசிக்கும கூடுதலான வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் ஹர்சாய 60 வீதமான வாக்குகளைப் பெற்று முன்னிலை வகிக்கிறார்.

இதன்படி ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட யூனஸ் குவானுனியை விட ஹர்சாய் 42 புள்ளிகளின் அடிப்படையில் முன்னிலை வகிக்கிறார்.

நடைபெற்று முடிந்த தேர்தல், மோசடிகள் நிறைந்ததாக இருந்தபோதும் தேசிய நலனைக் கருத்திற்கொண்டு இந்தத் தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ளப்போவதாக ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட குவானுனி கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமையிலிருந்து வாக்கு எண்ணும் பணிகளின் வேகம் அதிகரித்துள்ளதாகத்தகவல்கள் தெரிவித்தன.

" விடியல் காணவே வேள்வி செய்து தாய்
மடியில் உறங்குமா வீரர் நினைவினில்"

யாழ்.மாவட்டத் தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியத்து ஏற்பாட்டோடு,

மாவீரர் நினைவு தின விழா
கலை நிகழ்வுகளும் - போட்டி நிகழ்வுகளும்

காலம்:- 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை (மாவீரர் வாரத்து முதலாம் நாள்)
இடம்:- யாழ்.வீரசிங்கம் மண்டபக் கலையரங்கு

போட்டி நிகழ்வுகளின் விபரம் - நாடகம். கவிதை. கட்டுரை

1.நாடகப்போட்டி (நிபந்தனைகள்)
அ. 45 முதல் 50 நிமிடங்களுக்குள் இடம்பெறுபவையாக,
ஆ. ஏற்கனவே போட்டிகளில் கலந்துகொள்ளாத ஓரங்க நாடகங்களாக,
இ. பாரம்பரிய, பண்பாட்டு அடையாளங்களை அழிக்கும் கலை - கலாசார பிற நிகழ்வுகளை ஒழிப்பனவையாக,
ஈ. இன, மொழி, பிரதேச விடுதலையை வென்றெடுக்கத் தடையாகவுள்ள ஒடுக்குமுறைகளைத் தகர்ப்பனவையாக,
உ. பகுத்தறிவுச் சூழலைப் படைப்பனவையாக - இருத்தல்வேண்டும்

2.கவிதைப் போட்டி (நிபந்தனைகள்)
அ. தலைப்பு - சேர்ந்து வடம் பிடிப்போம்.
ஆ. 250 முதல் 300 சொற்களுக்கு இடைப்பட்டனவையாக - சுய ஆக்கமாக,
இ. A-4 தாளின் ஒவ்வொரு தாளிலும் ஒவ்வோர் பக்கமே எழுதப்பட்டோ, அன்றித் தட்டச்சு - கணினிமூலம் பொறிக்கப்பட்டு இருத்தல்வேண்டும்.
ஈ. கவிதைகளில் கீழ்வரும் உணர்வுகளில் ஒன்று பிரதிபலிக்கவேண்டும்.
I. சமூக உணர்வு
II. தேசவிடுதலை முன்னெடுப்பு
III. மாவீரர் தியாகத்தின் மதிப்பு
IV. பகுத்தறிவுப் பண்பாடு
V. பைந்தமிழர் வீர வரலாறு

3.கட்டுரைப் போட்டி (நிபந்தனைகள்)
அ. மாணவர் மட்டுமே பங்குபற்றக்கூடியது.
ஆ. 700 முதல் 750 சொற்கள் கொண்டதாக இருத்தல் முக்கியமானது.
இ. பாடசாலை வகுப்பாசிரியர்/அதிபரால் உறுதிப்படுத்தப்படல்வேண்டும்.
ஈ. தலைப்பு
I. தேவை ஒரு சுதந்திர வாழ்வு
II. தாயகமும் - தேசியமும்
III. தாயக வரலாறும் - தமிழர் பண்பாடும்
IV. விலங்கொடு வாழ்வதா? விடுதலை வேண்டுமா?

2. A.4 தாள்களில் ஒவ்வோர் பக்கமும் எழுதப்பட்டோ அன்றித் தட்டச்சு/கணினி மூலம் அச்சடிக்கப்பட்டோ உங்கள் ஆக்கங்களை எமக்கு அனுப்பிவைக்கலாம்.
போட்டிகளுக்குப் பெறுமதிமிக்க 1 ஆம், 2 ஆம், 3 ஆம் பரிசுகளோடு ஆறுதற் பரிசுகளும் வழங்கப்படும்.
பிரவேசங்கள் இலவசம்.
விண்ணப்ப முடிவு திகதி - 05.11.2004 வெள்ளிக்கிழமை

கவிதை, கட்டுரை அனுப்பவேண்டிய கடைசித்திகதி - 10.11.2004 புதன்கிழமை படைப்புக்களோ, அன்றி விண்ணப்பங்களோ அனுப்புவதாயின் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் போட்டியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி
செயலாளர்,
தனியார் போக்குவரத்துச் சேவைச் சங்கங்களின் ஒன்றியம்,
50/1, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(968)

# இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகளுக்கெதிராக பாகிஸ்தான் படையினர் படை நடவடிக்கை

பாகிஸ்தானின் தென்பகுதி வசிறிஸ்தான் மாகாணத்தில் இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளுக்கெதிராகப் பாரிய படை நடவடிக்கையொன்றைப் பாகிஸ்தான் படையினர் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்த வண்ணமிருந்தனர்.

பாகிஸ்தானில் அண்மையில் இரண்டு சீனப் பொறியியலாளர்கள் கடத்தப்பட்டதற்குக் காரணமாக இருந்த இஸ்லாமியக் கிளர்ச்சிவாதிகளின் தலைவரான அப்துல்லா மெசூத் என்பவரைக் கைதுசெய்யும் முயற்சியே இந்தப்படை நடவடிக்கை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் படை நடவடிக்கையால் ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து உடனடித் தகவல் எதுவும் கிடைக்கவில்லையென பெஷாவரிலுள்ள பி.பி.ஸியின் செய்தியாளரான ஹரூன ரஷீத் தெரிவித்தார்.

அரசாங்கத்துடன் இடம்பெற்ற நீண்டகாலப் பேச்சுவார்த்தைகள் முறிவடைந்த காரணத்தாலேயே தாம மீளவும் இந்தப்படை நடவடிக்கையை ஆரம்பித்ததாக உள்ளூர் படையதிகாரியான ஹஜி உமர் தெரிவித்தார்.

படையினரின் இந்தப்படை நடவடிக்கையிலிருந்து தப்புவதற்காகப் பெருமளவு குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக ஜன்டோலா நகரின் கிராமவாசியான அலான் குல் பிற்றானி தெரிவித்தார். இந்தப்படை நடவடிக்கை கடந்த செவ்வாய்க்கிழமை பாகிஸ்தான் படையினரின் வாகனத்தொடரணி மீது இஸ்லாமிய கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினரும், ஒரு கிளர்ச்சிவாதியும் கொல்லப்பட்ட பின்னரே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு
# கிடைத்த இரு வாய்ப்புக்களை ஜே.வி.பியே சீர்குலைத்தது!
### ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டில் நீண்டகாலமாக நிலவி வருகின்ற இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குக் கிடைத்த இரண்டு வாய்ப்புக்களையும் ஜே.வி.பியே சீர் குலைத்ததாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.


ஜே.வி.பியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த கருணாதிலக விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் - இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா ஏற்றுக் கொண்டபோதும் ஜனாதிபதியுடன் கூட்டுச சேர்ந்துள்ள ஜே.வி.பி அதற்கு தடையாக இருக்கிறது.

ஒஸ்லோப் பிரகடனத்திற்கும், டோக்கியோ நிதியுதவிவழங்கும் நாடுகள் கூட்டத்திலும் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு ஏற்ப பேச்சுக்கள் ஆரம்பிக்கவேண்டும் என்ற நிலைப் பாட்டில் ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க உள்ளார்.

அதறகு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி மறுப்புத் தெரிவித்து வருகிறது. ஜே.வி.பி ஜனாதிபதியின் நிலைப்பாட்டிற்கு ஆதரவு வழங்குவதோடு இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் அரம்பிக்க ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## வைத்தியசாலைப் படுகொலை நேற்று நினைவு கூரப்பட்டது!



யாழ்போதனா வைத்தியசாலையில் இந்தியப் படையினரால் 1987 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள் உட்பட 21 பேரின் நினைவு தினம் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக ஈகச்சுடரை யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் சதிர்முகன் நல்லூர் கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் செழியன் மற்றும் படுகொலை செய்யப்பட்ட பணியாளர்களின் தாய், தந்தை உறவினர்கள் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து படுகொலை செய்யப்பட்டவர்களின் உருவப்படத்திற்கு வைத்தியர்கள், பணியாளர்கள் உறவினர்கள் எனப்பலரும் மலர் அஞ்சலி செலுத்தினர். இதையடுத்து மரணமடைந்தவர்களின் ஆத்மசாந்திக்காக வழிபாடுகளும் நடத்தப்பட்டன.

### மக்கள் தொடர்பகம் இடமாற்றம்

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு கைவேலியில் இயங்கிவந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைச்செயலக மக்கள் தொடர்பகம் நேற்று முதல் உடையார்கட்டு வள்ளிபுரம் இனிய வாழ்வு இல்லத்துக்கு முன்பாக இயங்குகின்றது என விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## 2 ஆவது தொகுதிப் பட்டதாரிகளுக்கு நேற்று பயிற்சிகள் ஆரம்பம்

பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ், தெரிவுசெய்யப்பட்ட இரண்டாவது தொகுதி பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆரம்ப நிகழ்வு யாழ்.மாவட்டத்தில் ஐந்து இடங்களில் நேற்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மற்றும் தீவகத்தைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்திலும், வடமராட்சியைச் சேர்ந்தவர்களுக்கு கரவெட்டி பிரதேசசபை மண்டபத்திலும், வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்திலும், கோப்பாயைச் சேர்ந்தவர்களுக்கு தென்மராட்சி பிரதேச சபை மண்டபத்திலும் பயிற்சிகள் ஆரம்பமாகும். அரச திணைக்களப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் இரண்டாவது தொகுதியில் யாழ். மாவட்டத்தில் மட்டும் 1647 பட்டதாரிகள் பயிற்சிக்காக அழைக்கப்பட்டிருந்தனர்.

யாழ்ப்பாணம், தீவக பட்டதாரிகளின் ஆரம்ப நிகழ்வு யாழ்.வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்றபோது யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி, யாழ்.மாநகரசபை ஆணையாளர் குணரர்சா ஆகியோர் கலந்துகொண்டனர்.

## தென்பகுதியிலிருந்து வரும் கலை இலக்கிய குழுவினரால் நூல்கள் நாளை அன்பளிப்பு!

தமிழ் - சிங்கள கலை இலக்கியவாதிகள் மற்றும் கலைஞர்களின் நட்புறவை வலுப்படுத்தும் முயற்சியாக யாழ்.பொது நூலகத்துக்கு ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்ய தென்னிலங்கையிலிருந்து கலை இலக்கியவாதிகள் குழுவொன்று இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

இலங்கையின் கலைக்கழகத்தினால் சேரிக்கப்பட்ட ஒரு தொகுதி நூல்கள் இந்தக்குழுவினால் நாளை காலை பத்து மணிக்கு யாழ்.பிரதம நூலகர் தனபால்சிங்கத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

பல்வேறு அமைச்சுக்கள், சீன அரசாங்கம், கொழும்பிலுள்ள எழுத்தாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், பாடசாலைகள் மற்றும் பொது மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட அன்பளிப்பு நூல்கள் இந்தத் தொகுதியில் அடங்கியுள்ளன.

தென்னிலங்கை வாழ் மக்கள் இன, மத பேதங்களுக்கு அப்பால் வடக்கில் வாழும் மக்களுக்கு நேசக்கரம் நீட்டுவதனை எடுத்துக் காட்டும் ஒரு அரிய நிகழ்வாக இது இடம்பெறவுள்ளது.

இந்த நூல்களைக் கையளிப்பதற்காக 25 பேர் அடங்கிய தமிழ் - முஸ்லிம் - சிங்கள கலை இலக்கியவாதிகள் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர். இதற்கான சகல ஏற்பாட்டினையும் இலங்கை கலைக் கழகத் தலைவர் சாள்ஸ் "தயாணந்தா மேற்கொண்டுள்ளார். (தே)

### மூன்று...

தொண்டர் ஆசிரியர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்றும் அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### பாதுகாப்பு...

பாதுகாப்பு உடன்பாட்டில் உள்ளடக்கப்படவேண்டிய 98 சதவீதமான விடயங்களில் இணக்கப்பாடு காணப்பட்டது.

இந்த உடன்பாட்டின்படி இரு நாடுகளுக்கும் இடையே இராணுவப் பயிற்சி, கடற்படையினருக்கு ஒத்துழைபபு வழங்குதல் உட்பட பல விடயங்கள் அடங்கியிருக்கின்றன. இந்த ஒப்பந்தத்தில் எப்போது கைச்சாத்திடுவது என்பதை அரசாங்கமே தீர்மானிக்கும் எனவும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மேலும் தெரிவித்தார்.

### கருணா....

தில் இராணுவத்தினர் ஈடுபட்டதானது, அரசே தற்போது இடம்பெறும் சம்பவங்களின் சூத்திரதாரி என்ற சந்தேகத்தை கிளப்பியிருப்பதாக அந்தப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

### பொருத்தமான....

செலுத்துதல் வேண்டும். அதே போன்று இனப்பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு என்ன? எவ்வாறு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது? இடைக்கால நிர்வாக யோசனையை பேச்சுவார்த்தையில் உள்ளடக்குவதா? அல்லது இதே தீர்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்துவதா? இந்த இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் ஒரே சமயத்தில் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

இரண்டு விடயங்கள் தொடர்பாகவும் ஒரே சந்தர்ப்பத்தில் பேச்சுவார்த்தை நடத்தாது ஒன்றன் பின் ஒன்றாக பேச்சுவார்த்தைகள் நடத்தினால் நிச்சயம் பிரச்சினைகள் தோன்றும் எனத் தெரிவித்தார்.

### ஆர்ப்பாட்ட...

யினர் போராட்டத்தை தடுக்க முற்பட்டனர்.

இதனையடுத்து மாணவர்களுக்கும் அதிரடிப்படையினருக்குமிடையில் ஏற்பட்ட முறுகல் நிலை காரணமாகக் கைகளாலும் துப்பாக்கிப் பிடிகளாலும் மாணவர்கள் தாக்கப்பட்டனர். இதனையடுத்து மாணவர்களும் மாணவிகளும் [illegible] சிதறி ஓடியதால் சில நிமிட நேரம் [illegible] பதற்றம் நிலவியது.

## சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை
### அரச தரப்புத் திட்டம்

நாடாளுமன்றத்தின் சபாநாயகர் டபிள்யு.ஜே.எம்.லொக்கு பண்டாரவுக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டுவர அரசாங்கத் தரப்பு அமைச்சர்கள் தீர்மானம் எடுத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாடாளுமன்றக் கூட்டம் ஒன்றிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் - அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, விமல் வீரவன்ச உட்படப் பல அமைச்சர்கள் கலந்துகொண்டனர்.

சபாநாயகர் பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகச் சுட்டிக்காட்டிய இவர்கள் நேரடியாக இந்த விடயம் தொடர்பாக லொக்கு பண்டாரவை நேரடியாகச் சந்திப்பதாகவும் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

## ஊழல் நிறைந்த நாடுகளில் இலங்கை 67 ஆவது இடம்!

(கொழும்பு)

உலகில் ஊழல் நிறைந்த நாடுகளின் வரிசைப்படுத்தலில் இலங்கை 67 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

146 நாடுகள் ஊழல் நிறைந்த நாடுகளாக இனம் காணப்பட்டு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்தப் பட்டியலில் முதலிடத்தைப் பங்களாதேசும், அதைத் தொடர்ந்து ஹெயிட்டி, நைஜீரியா, மியன்மார் போன்ற நாடுகள் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன.

ஊழலற்ற நாடாக பின்லாந்து தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## புன்னாலைக் கட்டுவன் சூட்டுச் சம்பவம்
# இரு சந்தேக நபர்களும் பிணையில் செல்ல அனுமதி

புன்னாலைக்கட்டுவனில் கடந்த மாதம் 9 ஆம் திகதி தோட்டத்தில் நின்ற அருணாச்சலம் முத்தையா என்பவரை சுட்டுக்கொலை செய்தமை தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களில் இருவர் நேற்றுமேல் நீதிமன்றத்தினால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான ஜெயபாலசிங்கம், கந்தசாமி கனகலிங்கம், இரத்தினசிங்கம் சசீலன், இராசரத்தினம் விஷ்னுகரன், கனகலிங்கம் புருஷாந்தன், தம்பிராசா ஸ்ரீகாந்தா, நல்லரத்தினம் வசீகரன், சிவசரணம் செல்வகேசவன் ஆகியோர் மீதான விசாரணையே மேல்நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

எட்டு சந்தேக நபர்களுக்கும் மேற்படி சம்பவம் தொடர்பாக எந்தவித தொடர்பும் இல்லையென்றும் இந்த வழக்கில் முதலாவது மூன்றாவது சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டிருக்கும் இருவரும் நவம்பர் மாதம் யாழ் பல்கலைக்கழகத்தில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் என்றும், ஏனைய ஆறு பேரும் குடும்பப் பொறுப்பபை உடையவர்கள் எனவும் சட்டத்தரணி மு.சபாநாதன் பிணை மனுவை சமர்ப்பித்தார்.

இதனை அடுத்து அரசசட்டவாதி சுகந்தி கந்தசாமி மூன்றாம், முதலாம் சந்தேக நபர்களை பிணையில் விடுவதை தான் ஆட்சேபிக்கவில்லை என்றும், வழக்கு முடியும்வரை ஏனைய ஆறுபேரையும் பிணையில் விடுவதை தான் ஆட்சேபிப்பதாகவும் தெரிவித்தார்.

இதற்கமைய நீதிபதி முதலாவது, மூன்றாவது நபர்களை மல்லாக நீதி நிர்வாக பிரிவிற்குறப்பட்ட 45 வயதிற்கு மேற்படாத இரண்டு நிரந்தர அரசாங்க ஊழியர்களின் தலா ரூபா 200,000 சரீரப் பிணையிலும், ரூபா 10,000 ரொக்கப்பிணையிலும் விடுதலை செய்யுமாறும் கட்டளையிட்டதுடன் ஏனைய ஆறு பேர்களின் பிணை விண்ணப்பங்களை நிராகரித்தார்.

## கருணா குழுவுக்கு...

லைக்கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் நேற்று நண்பகல் நடாத்திய கவனயீர்ப்புப் போராட்டத்தில் தமிழரே புலிகள், புலிகளே தமிழர் என்றும் விடுதலைப் புலிகளே தமிழர்களின் ஏக பிரதிநிதிகள் என்றும், தமிழர்களின் ஒரே தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே என்றும் கருணாவிற்கு எதிரான ஏராளமான பதாதைகளை வைத்திருந்ததுடன், கோஷங்களையும் எழுப்பினர்.

மட்டக்களப்பு மக்களினதும், ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமூகத்தினதும் மிகப்பெரிய துரோகியே கருணா என்றும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் பலத்த கோஷமெழுப்பினர்.

ஆயிரமாயிரம் தமிழ் மக்களைக் கொன்றொழித்து, கிழக்கிலங்கையின் தமிழ் கிராமங்கள் பலவற்றைச் சூறையாடியதுடன், தமிழ்-முஸ்லிம் சமூகங்களிடையே குரோதத்தை உருவாக்கிவரும் அரசினதும், இராணுவத்தினதும் கைக்கூலியாக மாறிய கருணா ஒரு அப்பட்டமான தமிழினத துரோகி என்றும் அங்கே கோஷமெழுப்பப்பட்டது. இதேவேளை ஆரையம்பதி பிரதேச செயலகம் முன்பாகவும் இது போன்றதொரு போராட்டம் நடைபெற்றது.

### பணிநிலை வெற்றிடம்
### அலுவலக செய்தியாளர்கள்

'நமது ஈழநாடு' பத்திரிகையின் அலுவலக செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 2004. 10.27 புதன்கிழமை காலை 10 மணிக்கு - கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

கல்வித் தகைமை - க.பொ.த (உயர்தரம்)

கிளிநொச்சியில் எமது அலுவலக செய்தியாளராகப் பணிபுரிய விரும்புவோரும் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 22.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.